Registered as Newspaper

# உதயன்

| சுடர் : 36 கதிர் : 93 | சனிக்கிழமை | மாசி 15 ஆம் நாள் 27 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111 |
|---|---|---|---|---|---|

# ஆணையாளர் அறிக்கையின் பரிந்துரைகள் நிறைவேறும்!




## ஐ.நா. மனித உரிமைகள் சபை திட்டவட்டம்

ஜெனிவா, பெப்ரவரி 27

மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு இலங்கை அரசு எதிர்ப்புத் தெரிவித்தாலும், அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அலுவலகம் தெரிவித்துள்ளது. 19

## இலங்கைக்கு சீனா ஆதரவு

ஜெனிவா, பெப்.27

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு எதிராகத் தீர்மானம் ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், இலங்கை அரசுக்கு சீனா ஆதரவளித்து 19

## 21 நாடுகள் ஆதரவு! 15 நாடுகள் எதிர்ப்பு!!

கொழும்பு, பெப்.27

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் இதுவரையான உரைகளின் அடிப்படையில் 21 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகவும், 15 நாடுகள் எதிராகவும் கருத்துகளை வெளியிட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. 19

## விபத்தில் காயமடைந்த முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப்.27

விபத்தில் சிக்கிச் சிகிச்சை பெற்று வந்த முதியவர் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

கொக்குவில் மேற்கு, கொக்குவிலைச் சேர்ந்த செ.சண்முகலிங்கம் (வயது-80) 19

## அரசின் பரிந்துரை திங்கள் ஐ.நாவுக்கு

கொழும்பு, பெப்.27

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் புதிய பிரேரணையுடன் தொடர்புடைய பரிந்துரைகளை எதிர்வரும் திங்கட்கிழமை முன்வைப்பதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர 19

## இலங்கைக்கு எதிரான பிரேரணை தோற்கும்!

### அரசாங்கம் நம்பிக்கை

கொழும்பு, பெப். 27

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவு நிச்சயம் தோற்கடிக்கப்படும். அதில் மாற்றுக் கருத்துக்கள் எதுவுமில்லை.

இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார் இலங்கை அரசின் அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல. 19

## ஜெனிவா தீர்மானத்துக்கு இந்தியாவின் ஆதரவு தேவை!

### சம்பந்தன் கோரிக்கை

கொழும்பு, பெப். 27

இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடனான தீர்வு விடயத்தில் இந்தியா மேலும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அதை உறுதிப்படுத்தும் வகையில் ஜெனிவாவில் இந்த முறை முன்வைக்கப்படும் இலங்கை தொடர்பான புதிய பிரேரணைக்கு இந்தியா கட்டாயம் ஆதரவு வழங்க 19

## யாழ். சிறைக் கைதிகள் 6 பேருக்குக் கொரோனா

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 6 கைதிகளுக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் நேற்று 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 6 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விளக்கமறியல் கைதி 19

## பிரம்டன் நகரத்துக்குள் தனித் தூபி வேண்டாம்

### இலங்கை அழுத்தம்

கொழும்பு, பெப்.27

கனடா பிரம்டன் நகரசபைக்குட்பட்ட பகுதியில், தமிழருக்கு என்று தனியாக ஒரு தூபி வேண்டாம். அந்த இடத்தில் சமாதானத் தூபியை அமையுங்கள் என்று இலங்கைத் தூதரகம், பிராம்டன் நகரசபைக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. 19

## பழமைமிக்க தமிழ்க் கல்வெட்டு திருமலையில் கண்டுபிடிப்பு!



திருமலை, பெப்.27

திருகோணமலை கோணேஸ்வர ஆலயத்துக்கு அருகில் உள்ள இராவணன் கல்வெட்டுக்கருகில் பழமை வாய்ந்த தமிழ்க் கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறை பேராசியர் ப.புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார். 19

## நாய்க்கூண்டு ஏற்றிய இளைஞன் மின்சாரம் தாக்கியதில் உயிரிழப்பு!

### கிளிநொச்சியில் சோகம்

கிளிநொச்சி, பெப்.27

கிளிநொச்சி, கிருஷ்ணபுரத்தில் இளைஞன் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் நடந்துள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சதீஸ்வரன் (வயது-24) என்ற இளைஞரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞன் மீன் வியாபாரத்தில் ஈடுபடுபவர். இவர் வளர்ப்பு நாய் ஒன்றை வாங்கிய நிலையில், அந்த வீட்டில் இருந்த நாய்க் கூண்டை ஏற்ற நேற்றுச் சென்றுள்ளார். நாய்க் 18

## அநுர சேனநாயக்க நேற்று காலமானார்



யாழ்ப்பாணம், பெப்.27

முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க நேற்று உயிரிழந்தார். புற்றுநோய் காரணமா 18

# நகரசபைத் தலைவரின் பிடிவாதம்; கைநழுவிப் போகும் அபிவிருத்தி!!

## இழுபறியில் 420 மில்லியன் ரூபா திட்டம்

**மன்னார், பெப். 27**

**நகர அபிவிருத்தி சபை, மன்னார் நகர அபிவிருத்திக்கு என 420 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளபோதும், நகரசபைத் தலைவர் மறுப்புத் தெரிவிப்பதால், அந்தத் திட்டம் மன்னாரை விட்டு கைநழுவும் நிலை ஏற்பட்டுள்ளது என்று சபையின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.**

ஒரு கட்டத்தில், நகரசபைத் தலைவரின் வார்த்தையால், உறுப்பினர் ஒருவர் சபையைவிட்டு வெளியேறிய சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

மன்னார் நகர சபையின் 36 ஆவது மாதாந்த அமர்வு கடந்த புதன்கிழமை நகர சபைத் தவிசாளர் ஞா.அன்ரனி டேவிட்சன் தலைமையில் நடைபெற்றது.

நகர அபிவிருத்தி சபையானது மன்னார் தீவின் நுழைவாயில் பகுதியில் பாலத்துக்கு அருகாமையில் 420 மில்லியன் ரூபாவில் எட்டு அடி அகலமும் ஒன்றரை கிலோ மீற்றர் நீளமும் உள்ள நடைபாதையும், அத்துடன் ஒரு பூங்காவும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும், குறித்த பகுதி மன்னார் பிரதேச சபைக்கு உரியதா அல்லது மன்னார் நகர சபைக்கு உரியதா என்பது தொடர்பாக மன்னார் பிரதேச சபைக்கும் மன்னார் நகரசபைக்குமிடையே பிணக்கு நிலவி வருகின்றது.

இந்தத் திட்டம் மன்னாரைவிட்டு செல்லக்கூடாது என்பதற்காக இரு சபைகளின் ஒப்புதலுடன் இந்தத் திட்டத்தை மன்னார் மாவட்டச் செயலரின் பொறுப்பில் மேற்கொள்வது எனவும் இரு சபைகளின் பிணக்குகள் தீர்க்கப்பட்டபின் இந்த இடம் யாருக்கு உரிமையாகின்றதோ அவர்களிடம் ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்ட நிலையில் இரு சபையினரையும் அழைத்து ஒப்புதல் கேட்கப்பட்டது.

ஒப்புதலில் மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள் மாவட்டச் செயலர் தலைமையில் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல சம்மதம் வழங்கியுள்ளனர். நகரசபையின் சம்மதத்தைப் பெறும் நோக்குடன் மன்னார் நகர சபை உறுப்பினர்கள் ஒப்புதல் பெற மாவட்டச் செயலரால் அழைக்கப்பட்டபோதும் மன்னார் நகர சபைத் தலைவர் மற்றும் செயலாளர் ஆகிய இருவரும் இந்தக் கூட்டத்தை புறக்கணித்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், நகர சபையின் மாதாந்த கூட்டம் நடைபெற்றபோது, அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக சுமார் 45 நிமிடங்கள் சபையில் விவாதிக்கப்பட்டது.

எனினும், நகர சபைத் தலைவர் "மத்திய அரசின் பொறுப்பில் குறித்த அபிவிருத்திகளைச் செய்ய அனுமதிக்க மாட்டேன். உள்ளூராட்சி சபையின் கீழ் செய்வதற்கே அனுமதிப்பேன். இந்த சபையில் நீங்கள் எல்லோரும் சம்மதித்தாலும் நான் கடைசிவரை அனுமதிக்கவும் மாட்டேன் கையெழுத்திடவும் மாட்டேன்" என்று தெரிவித்தார்.

கூட்டத்தில் பலரும் ஆதங்கப்பட்டு கருத்துக்களை தெரிவித்தபோது சபைத் தலைவர் உறுப்பினர் ஒருவரைப் பார்த்து "நீங்கள் மாவட்டச் செயலருக்கு வால் பிடிக்கின்றீர்கள்" என்று கூறினார். அதற்கு உறுப்பினர் கொலின், "மக்கள் நலன் கருதியே கருத்துக்கள் வெளியிடுகின்றோம். வால் பிடிக்கின்றோம் என்ற முறையற்ற வார்த்தையைக் கண்டித்து சபையைவிட்டு வெளியேறுகின்றேன்" என்று தெரிவித்து வெளியேறியிருந்தார். (த-60)

---

காணாமல் போனோரின் கதி

# கோத்தா அரசாங்கமே பதில் கூறவேண்டும்

## சம்பந்தன் கருத்து

கொழும்பு, பெப். 27

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை ஜனாதிபதி விரைவில் சந்திக்கவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். இது உண்மைச் செய்தி எனில் அதை ஜனாதிபதி அல்லது அவரின் ஊடகப்பிரிவுதான் உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை ஜனாதிபதி ராஜபக்ச நேரில் சந்திக்கவுள்ளார் எனின், அது தொடர்பில் ஜனாதிபதி அல்லது அவரின் ஊடகப்பிரிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும். அதைவிடுத்து இந்தச் சந்திப்பு தொடர்பில் வேறு அதிகாரிகள் கருத்துத் தெரிவித்திருந்தால் அது தொடர்பில் எம்மால் பதிலளிக்க முடியாது.

தற்போது ஜெனிவா கூட்டத்தொடர் நடைபெற்று வருகின்றது. இதையொட்டி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் நீதிக்கான போராட்டங்களும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வலுப்பெற்றுள்ளன. இந்த நிலையில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை ஜனாதிபதி விரைவில் சந்திக்கவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உண்மையில் என்ன நடந்தது என்ற கேள்விக்கு இலங்கை அரசு பதில் சொல்லியே தீர வேண்டும். பொறுப்புக்கூறல் கடமையிலிருந்து இலங்கை அரசு நழுவ முடியாது. இந்தக் கடமையிலிருந்து இலங்கை தப்ப சர்வதேசமும் ஒரு போதும் இடமளியாது - என்றார். (ஒ-5-22)

---

# 45 கிலோ ஹெரோய்னுடன் இராணுவத்தினர் கைது!

கொழும்பு, பெப். 27

450 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான 45 கிலோகிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை இராணுவ சொகுசு வாகனத்தில் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் இராணுவத்தினர் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அருகொட சாலித என்ற பெரியளவிலான போதைப்பொருள் கடத்தல்காரரின் போதைப் பொருளே ஹொரண, திகேனபுர பகுதியில் கடந்த புதன்கிழமை இரவு கைப்பற்றப்பட்டது.

தெற்கு மாகாணத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி மற்றும் பாதாள உலகத் தலைவரான மிதிகம சிந்தக அல்லது 'ஹரக் கட்டா' என்பவரிடமிருந்து போதைப்பொருள் பெற்று, ஹொரண, திகேனபுர பகுதியில் உள்ள தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் திரும்பி வரும்போது அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டபோது இரு இராணுவத்தினரும் இராணுவச் சீருடை அணிந்திருந்தனர் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

இருவரும் அட்டீடிய மற்றும் மருதானை இராணுவ முகாம்களைச் சேர்ந்தவர்கள் என்பதும், வாகனம் அட்டீடியா இராணுவ முகாமிலுள்ள ஒரு படைப்பிரிவுக்குச் சொந்தமானது என்றும் முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, கைதானவர்களில் ஒருவர் இராணுவத்தை விட்டு தப்பியோடியவர் என்றும், மற்றைய அதிகாரிக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (த-இ)

---

# நீதிமன்ற அவமதிப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்

## பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம்

## நீதி அமைச்சருக்கு காரணங்கள் முன்மொழிவு

கொழும்பு, பெப். 27

இலங்கையின் நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தை, ஏனைய நாடுகளில் உள்ளதைப்போன்று ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்த வேண்டியதற்கான அடிப்படைக் காரணங்கள் தொடர்பில் இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தின் முன்மொழிவுகள் அடங்கிய தொகுப்பொன்றை இந்த வாரம் ஜனாதிபதி சட்டத்தரணியும் நீதி அமைச்சருமான அலி சப்ரிக்கு இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் அனுப்பிவைத்துள்ளது.

நீதி அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள குறித்த கடிதத்தில், நீண்ட காலமாக உணரப்படும் நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான சட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கான அவசியத்தை இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஜனாதிபதி சட்டத்தரணியுமான மறைந்த லக்ஸ்மன் கதிர்காமர் தலைமையிலான 2003ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

அத்துடன் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைக் குழுவால் 2006 இல் தயாரிக்கப்பட்ட நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் தொடர்பான ஒரு வரைவையும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் நீதி அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளது. மேலும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் உள்ளீடுகளையும் இவ் அறிக்கை கொண்டுள்ளது.

2003 இல் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அதே பரிசீலனைகள் இன்று அதைவிட அதிக வலுவுடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், இலங்கையின் சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்டக் கோட்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டவையாக அமையப் பெற்றிருக்க வேண்டும் எனவும், அதனடிப்படையில் சட்ட ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் நிகழும் அவமதிப்புக்கான சக்தியானது பாகுபாடின்றி நியாயமாக பயன்படுத்தப்பட வேண்டியதோடு, அவமதிப்புக்கான தண்டனையானது சட்டத்தால் வரையறுக்கப்பட வேண்டும் என்பது முக்கியமான கொள்கையாக இருக்க வேண்டும் எனவும் தாம் உணர்வதாக இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும், இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கையில் நீண்டகாலமாக தாமதமாகிவரும் நீதிமன்ற அவமதிப்பு சட்டத்தை வரைவதற்கு அரசு விரும்புமானால், இலங்கை பத்திரிகை ஸ்தாபனமானது தம்மால் முன்வைக்கப்பட்ட எந்தவொரு முன்மொழிவுகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தத் தயார் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. (த-இ)

### சிற்றூழியரின் பிரச்சினையை ஆராயாது

# இராணுவத்தின் பதில் கடமையை ஒருபோதிலும் ஏற்கவே மாட்டோம்

## மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு



முல்லைத்தீவு,பெப்.27

**சுகாதாரச் சிற்றூழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள நிலையில் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பிலோ, கோரிக்கைகள் தொடர்பிலோ கவனம் செலுத்தாத அரசாங்கம், அந்த சிற்றூழியர்களுக்குப் பதிலாக இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்தியிருப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

சுகாதார சிற்றூழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள நிலையில், அவர்களுக்குப் பதிலாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மக்களின் அறவழிப் போராட்டத்தை மதிக்காமல், படைத்துறையின் வலு கொண்டு எதிர்கொள்ளும் போக்கை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது.

சுகாதாரச் சிற்றூழியர்களின் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பில், அந்த சிற்றூழியர்களின் கருத்துக்களை கேட்காமல் உடனடியாகவே சிற்றூழியர்களுக்குப் பதிலாக இராணுவத்தை அந்த பணிகளுக்காக ஈடுபடுத்துவதென்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

இவ்வாறு எமது மக்கள் மீது அரசு அடக்குமுறைகளைத் திணிக்கும்போது, எமது மக்கள் வீறுகொண்டு எழுவார்களே தவிர, மாறாக எமது மக்கள் மீதான அரசின் அடக்குமுறை எண்ணம் ஒருபோதும் ஈடேறாது -என்றார்.

(ஐ-246)

---

# பழநெடுமாறனுக்கு நலன் வேண்டி கிளிநொச்சியில் வழிபாடு

கிளிநொச்சி, பெப்.27

தமிழர் தேசிய முன்னணித் தலைவர் பழநெடுமாறன் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைய வேண்டி கிளிநொச்சி நகர் சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நேற்று இடம்பெற்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி பிரிவின் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பூசை வழிபாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(மு-இ)

---

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.27

நாவற்காடு கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாவற்காடு பொது நோக்கு மண்டபத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அங்கத்துவம் பெற்ற அனைத்து விவசாயிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும், கூட்டம் தொடர்பில் பிரேரணைகள் ஏதாவது இருப்பின் 7 நாள்களுக்கு முன் தமது அமைப்புக்கு அறியத்தருமாறும் செயலாளர் கேட்டுள்ளார்.

(வ-122)

---

# உபதேச நிகழ்வில் பிரதமர் பங்கேற்பு



கொழும்பு,பெப்.27

அனைத்து பௌர்ணமி தினங்களிலும் நடத்தப்படும் 'அமாதம் சிசிலச' தர்ம உபதேசத் தொடரின் 207 ஆவது உபதேச நிகழ்வு, விஜேராம உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்றது.

சமய வழிபாடுகளில் ஈடுபட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ச, தர்ம உபதேசம் நிகழ்த்துவதற்காக வருகை தந்திருந்த வடமேல் மாகாண பிரதான சங்கநாயக்கர் பேராசிரியர் வணக்கத்துக்குரிய தும்புள்ளே ஸ்ரீ சீலக்கண்ட தேரருக்கு வெற்றிலைத் தட்டு வழங்கி வரவேற்றார்.

"விவசாயத் தோட்டங்களை உருவாக்குதல், வனங்களை மேம்படுத்துதல், பொதுமக்களுக்கு மட்டுமல்லாது சிறிய விலங்குகளுக்குமான குடிதண்ணீர் வசதிகளை வழங்குவதை எளிதாக்குதல் உள்ளிட்ட தேவையைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்பட்டால் இந்த நாடு அபிவிருத்தி அடையும்." என்று தும்புள்ளே ஸ்ரீ சீலக்கண்ட தேரர் தனது உரையில் தெரிவித்தார்.

(கு-இ)

---

# கடந்த 10 வருடங்களில் கட்டாரில் நடந்த துயரம்

## 6,500 பேர் சாவு

கொழும்பு,பெப்.27

கடந்த 10 வருடங்களில், கட்டாருக்குத் தொழில் வாய்ப்புக்காகச் சென்ற 6 ஆயிரத்து 500 க்கும் அதிகமான வெளிநாட்டுப் பணியாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்ற தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெரும்பாலானோர் கட்டாரில் உயிரிழந்துள்ளனர் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவர்களில் பெரும்பாலானோர் அந்த நாட்டில் மைதானக் கட்டுமானப் பணியில் ஈடுபடச் சென்றவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதிக வேலைப்பளு காரணமாக கடந்த 10 வருடங்களில் சராசரியாக வாரமொன்றுக்கு குறித்த 5 நாடுகளைச் சேர்ந்த 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளுக்கு அமைவாக 2011 -2020 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 5 ஆயிரத்து 927 வெளிநாட்டுப் பணியாளர்கள் உயிரிழந்துள்ளனர். என்று தெரிவிக்கப்படுகிறது.

(கு-இ)

---

### ஒரு லட்சம் காணித்துண்டுகள்

# கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நேர்முகத் தேர்வுகள் ஆரம்பம்

இளம் தொழில் முனைவோருக்கான ஒரு லட்சம் காணித்துண்டுகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைய புதுக்குடியிருப்பு பிரதேச செயலக எல்லைக்குள் காணிகளைப் பெறுவதற்கு விண்ணப்பித்திருந்த இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான நேர்முகத் தேர்வு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக கட்டம் கட்டமாக இடம்பெற்று வருகிறது.

அந்த வகையில், விசுவமடு மேற்கு கிராம அலுவலர் பிரிவிலிருந்து விண்ணப்பித்தவர்களில் முதல் தொகுதியினருக்கான நேர்முகத் தேர்வு நேற்று வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இந்த நேர்முகத் தேர்வுக்கு விசுவமடு மேற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 190 க்கு மேற்பட்டோர் அழைக்கப்பட்டிருந்தபோதும் 60 பேர் வரையானவர்களே கலந்து கொண்டிருந்தனர்.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக இடம்பெற்று வரும் நேர்முகத் தேர்வு வரிசையில் அடுத்த கட்டமாக எதிர்வரும்2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மல்லிகைத்தீவு மற்றும் மாணிக்கபுரம் கிராம அலுவலர் பிரிவில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 4ம் திகதி வியாழக்கிழமை வள்ளுவர் புரம் மற்றும் ஆனந்தபுரம் கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு இடம்பெறவுள்ளது.

நேர்முகத் தேர்வில் பங்குபற்ற அழைக்கப்பட்டவர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் தனித்தனியாக தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள், சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

(ந-115)

---



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் சந்தை நிகழ்வு நேற்று இடம் பெற்றது. (ப-56)

# இலங்கையை தண்டிக்காவிடில் மீண்டும் வன்முறை வெடிக்கும்

## ஐ.நா. பேரவையில் கனடா எச்சரிக்கை



கொழும்பு,பெப்.27

**மனித உரிமைகள் விடயத்தில் இலங்கையைத் தண்டிக்காவிடில், துரதிஷ்டவசமாக அது அங்கு வன்முறை மற்றும் மோதல் ஏற்பட வழிவகுக்கும். இவ்வாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கனடா எச்சரித்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் உயர் ஆணையாளர் சமர்ப்பித்த அறிக்கை தொடர்பாக, வெளியுறவு அமைச்சரின் நாடாளுமன்றச் செயலாளர் றொப் ஒலிஃபண்ட் கருத்து வெளியிட்டுள்ளார். அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

30/1 தீர்மானத்துக்கான ஆதரவை மீளப்பெறும் இலங்கை அரசின் முடிவு எமக்கு வருத்தமளிக்கிறது. மீளிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் ஆகியவற்றுக்கான உள்நாட்டு நடைமுறைகள் தொடர்ந்தும் பயனளிக்கத் தவறி வருகின்றன. தப்பிப்பிழைத்தோர், உண்மையைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் உறுதியாக இருப்பதுடன், அசாத்தியமான ஆபத்துக்களின் மத்தியிலும் சான்றுகளை வழங்க முன்வந்துள்ளனர்.

அவர்களது தாங்குசக்தியையும், துணிவையும் நாம் கண்டுணர்கிறோம். மனித உரிமை நிலைமை சீர்குலைந்து செல்வது குறித்து கவலை எமக்கும் உள்ளது. குடிசார் ஆட்சி, சுதந்திரமான நீதித்துறை, குடிசார் சமூக செயற்பாட்டுக்கான வெளி, மனித உரிமைகளுக்கான மதிப்பு, ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகிய அனைத்தும் வலுவிழக்கச் செய்யப்படுகின்றன.

முஸ்லிம்களின் உடல்கள் பலவந்தமாகத் தகனம் செய்யப்படுவது மற்றும் தமிழர்களின் நினைவேந்தல்கள் மீதான கட்டுப்பாடுகள் என்பவை நாட்டில் பிளவுகளை மேலும் அதிகரிக்கும். இலங்கையை நிகழ்ச்சி நிரலில் வைத்திருப்பதும், மீளிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதும் பேரவைக்குள்ள கடமையெனக் கனடா நம்புகிறது- என்றுள்ளது. (க-இ)

# குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்துவோம்

## ஜேர்மனை அழைக்கிறது நாடு கடந்த தமிழீழ அரசு

கொழும்பு,பெப்.27

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த ஜேர்மன் குரல் கொடுக்க வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசு கோரியுள்ளது. இது தொடர்பான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது:

ஜேர்மன் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இணைய வழியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கையெழுத்து வேட்டையில் அனைவரும் பங்கெடுத்து, ஒன்றுபட்ட தமிழர் பலத்தை வெளிப்படுத்த வேண்டும்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்புவதற்கான பரிந்துரையோடு, ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு அனுப்ப வேண்டும்.

பாதிப்புக்குள்ளான மக்கள் பொது வாக்கெடுப்பின் வழியாக அரசியல் தீர்வு காண்பதில் பங்கேற்க அதிகாரமளித்தல் வேண்டும். போரால் விதைவைகளான தமிழ்ப் பெண்கள், காணாமலாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்கள் மற்றும் தமிழ் போர்க் கைதிகள் ஆகியோரின் நிலைமை குறித்தும், வெவ்வேறு காரணிகளின் முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு மற்றும் இராணுவமயமாக்கல் ஆகியவை குறித்தும், ஐ.நா மனிதவுரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகத்திலிருந்து ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை ஐ.நா மனித உரிமைப் பேரவைக்கு தொடர்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இந்த நிலைப்பாடு களை புதிய தீர்மானத்தில் உள்ளடக்க வேண்டும் என்றுள்ளது. (க-இ)

# அட்டை பிடிக்கச் சென்ற மீனவர் சடலமாக மீட்பு

## மன்னாரில் சோகம்

மன்னார், பெப்.27

மன்னார் தாழ்வுபாடு தென்கடல் பகுதியில் அட்டை பிடிக்கச் சென்ற நிலையில் காணாமல் போன மீனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மன்னார் உப்புக்குளம் பகுதியில் வசித்துவரும், நான்கு பிள்ளைகளின் தந்தையான தாஜிதீன் (வயது - 55) என்ற மீனவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அட்டை பிடிப்பதற்காக நேற்றுமுன்தினம் மாலை 2 மணியளவில் ஐந்து மீனவர்கள் கடலுக்குச் சென்றுள்ளனர். அதில் அட்டை பிடிப்பதற்காக கடலில் குதித்த நபர் வெளியே வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் குறித்து கொழும்பு கடற்படை தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டு காணாமல் போன மீனவரைத் தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த நிலையில் தென் கடல் பகுதியில் முருகை கற்கள் காணப்படும் இடத்திலிருந்து மீனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ப-213)

# இலங்கையில் ஓரம்கட்டப்படும் சிறுபான்மைச் சமூகத்தவர்கள்

## கவலை வெளியிட்டது அமெரிக்கா

இலங்கையில் சிறுபான்மைச் சமூகத்தவர்கள் ஓரங்கட்டப்படுவது அதிகரித்துள்ளது. அங்கு சிவில் சமூகம் செயற்படுவதற்கான தளம் குறைவடைந்துள்ளது. இவ்வாறு அமெரிக்கா, ஜெனிவாவில் கவலை வெளியிட்டுள்ளது.

ஜெனிவாவுக்கான அமெரிக்கத் தூதரகத்தின் டானியல் குறென் பீல்ட் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46 ஆவது அமர்வில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை மீதான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தந்திரோபாயத்தை இலங்கை முன்வைக்க வேண்டும். அதற்கான கால அட்டவணையொன்றை முன்வைக்க வேண்டும்.

இலங்கை ஜனாதிபதி நியமித்துள்ள புதிய ஆணைக்குழு பொறுப்புக்கூறல் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஆணையை கொண்டிராததை நாங்கள் அவதானித்துள்ளோம். காணா மல் போனவர்கள் குறித்த அலுவலகமும், இழப்பீட்டுக்கான அலுவலகமும் அரசியல் தலையீடுகள் இன்றிச் செயற்படவேண்டும். என்றார். (க-இ)

# இலங்கையில் உரிமை மீறல்கள் மீண்டும் தலைதூக்கும் ஆபத்து;

## பொதுநலவாயத்துக்கான அமைச்சர் கவலை



கொழும்பு, பெப். 27

இலங்கையில் கடந்தகால மனித உரிமை மீறல்கள் மீண்டும் தலைதூக்குவதற்கான ஆபத்துக் குறித்து பிரிட்டனின் தென்னாசியா மற்றும் பொதுநலவாயத்துக்கான அமைச்சர் அஹமட் பிரபு கவலை வெளியிட்டுள்ளார்.

ஜெனீவா அமர்வுக்கான உரையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட முன்னேற்றங்களில் பின்னடைவு ஏற்பட்டுள்ளமை குறித்த பிரிட்டனின் கரிசனையை அவர் வெளியிட்டுள்ளார்.

சிவில் அரசு இராணுவமயப்படுத்தப்படுதல் மற்றும் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாவை கட்டாயமாகத் தகனம் செய்யும் கொள்கை குறித்தும் அவர் கரிசனை வெளியிட்டுள்ளார். இலங்கையில் முன்னையை ஆணைக்குழுக்கள் தோல்வியடைந்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ப)

# அடக்கம் செய்வதற்கான வர்த்தமானி வெளியீடு

கொழும்பு,பெப்.27

கொவிட்19 நோய்த் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களைத் தகனம் அல்லது நல்லடக்கம் செய்ய அனுமதிக்கும் வர்த்தமானி அறிவிப்பு சுகாதார அமைச்சால் நேற்றுமுன்தினம் இரவு வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் விடுக்கப்படும் பணிப்புரைக்கு அமைவாக, முறையான அதிகாரியால் நல்லடக்கத்துக்கான கோரிக்கை அங்கீகரிக்கப்படும்.

சுடலை அல்லது குறிப்பிட்ட இடத்தில் சடலங்களை அடக்கம் செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னைய கட்டளையில் தகனம் மட்டுமே என்ற சொற்பதம் நீக்கப்பட்டு தகனம் அல்லது அடக்கம் என்று மாற்றப்பட்டுள்ளது. (க-இ)

# 99 சதவீத பாதுகாப்புடன் முகக்கவசம் அறிமுகம்

*பேராதனை பல்கலை சாதனை*

வைரஸ் தாக்கத்திலிருந்து 99 சதவீதம் பாதுகாப்பளிக்கக் கூடிய புதிய முகக்கவசம் ஒன்று பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வுக் குழுவொன்றால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ச முன்னிலையில் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இந்த முகக்கவசத்தை குறித்த ஆய்வுக் குழுவினர் அறிமுகப்படுத்தினர்.

மூன்று படைகளைக் கொண்ட இந்த முகக்கவசம் அதிக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சர்வதேசத் தரத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை 25 தடவைகள் கழுவிப் பயன்படுத்த முடியும். தற்போது இந்த முகக்க வச்தை உள்ளூர்ச் சந்தைகளில் கொள்வனவுசெய்ய முடியும் எனவும், எதிர்காலத்தில் இதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது எனவும் தெரியவருகின்றது. (வ-இ)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஜனாஸா விவகாரம் மட்டுமே மனித உரிமை மீறல் அல்ல...!

கொரோனாத் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் சடலங்களை( ஜனாஸாக்களை) அடக்கம் செய்ய அனுமதிக்கும் வர்த்தமானி அரசாங்கத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது. கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் சடலங்களை, உலக நாடுகள் எல்லாம் புதைத்து வருகையில், அப்படிப் புதைத்தால் நிலத்தடி நீரோடு கொரோனா வைரஸ் கலந்துவிடும் என்றொரு 'இந்த நூற்றாண்டின்' அதியற்புத உண்மையை இலங்கை கண்டுபிடித்திருந்தது. அதன் பின்னர் உலக சுகாதார ஸ்தாபனம்கூட 'கொரோனா நோயால் இறந்தவர்களை புதைப்பதால் எந்தப் பாதக விளைவுகளும் இல்லை" என்று அறிவித்தபோதும், அதனை இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை. முஸ்லிம்களும் எவ்வளவோ போராடிப் பார்த்தனர். ஆனால், அரசாங்கம் அதனைக் கிஞ்சித்தும் கண்டுகொள்ளவில்லை. 'கபன்' துணி கட்டியும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். ஆனால் ஜனாஸாக்களை எரிப்பதே ஒரேவழி என்று ஒற்றைக்காலில் கோத்தாபய அரசாங்கம் நின்றது.

இப்போது திடீரென்று ஜனாஸாக்களை புதைக்க அனுமதிக்கும் வர்த்தமானியை வெளியிட்டு நல்லபிள்ளைப் பேரெடுக்க நினைக்கிறார்கள் ஆட்சியாளர்கள். இந்த வர்த்தமானி அறிவிப்புக்கு பின்னால் இலங்கையின் சிறுபான்மையினங்களில் ஒன்றான முஸ்லிம்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்த்து விட்டது போல ஒருமாயை தோன்றக்கூடும்.ஆனால் உண்மை அதுவல்ல. முஸ்லிம்கள் மீது உண்மையாகவே அக்கறை இருந்தால், எப்போதோ இந்தத் தடையை விலக்கி , ஜனாஸாக்களை புதைக்க அனுமதித்திருக்க வேண்டும்.முஸ்லிம் மக்கள் வீதியில் இறங்கிப் போராடுகையில் கூட, கல்லாகச் சமைந்திருந்துவிட்டு, இப்போது மட்டும் ஏன் இந்தத் திடீர் ஞானோதயம் ? சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை, எல்லாம் ஜெனிவா அமர்வை மனதிற்கொண்டே இந்தச்சதுரங்க ஆட்டம்.

ஜெனிவா அமர்வு ஆரம்பமாவதற்குச் சில தினங்களுக்கு முன்பு, ஜனாஸாக்களைப் புதைக்க அனுமதி மறுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை இஸ்லாமிய நாடுகள் எடுத்திருந்தன. ஆனால் இப்போது அதே "ஜனாஸா'' எரிப்பு விவகாரத்தில் இலங்கை குத்துக்கரணம் அடித்ததால், இஸ்லாமிய நாடுகளும் தங்கள் முடிவை பரிசீலனை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

வெறுமனே ஜனாஸா விவகாரத்தை மட்டும் மனித உரிமை மீறல் பிரச்சினையாகக் கருதுவதும், அது தீர்க்கப்பட்டதும் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அனைத்துமே முடிவுக்கு வந்துவிட்டன என எண்ணுவதுமே இஸ்லாமிய அரபு நாடுகளின் முடிவாக இருக்குமானால், அதனைவிட அபத்தமான விடயம் எதுவுமே இருக்க முடியாது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர், முஸ்லிம் சமூகத்தவர் தொடர்பான பௌத்த சிங்களப் பேரினவாத ஆட்சியாளரின் பார்வையும் அணுகுமுறைகளும் எத்தகைய தன்மை கொண்டவையாக இன்று வரை நீடிக்கின்றன என்பதை விபரிக்க வேண்டிய அவசியமில்லை.

ஜனாஸா புதைப்புக்கான அனுமதி என்பது தேசிய, சர்வதேச ரீதியிலான அழுத்தத்தின் அடிப்படையில் மட்டும் வழங்கப்படவில்லை. பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் வருகையினால் மட்டும் ஏற்பட்ட மனமாற்றத்தின் அடிப்படையிலானதுமில்லை. ஜெனிவாப் பொறிக்குள் இருந்து தன்னைப் பாதுகாக்க இஸ்லாமிய நாடுகளின் ஆதரவு இலங்கை அரசாங்கத்துக்கு மிக மிக அவசியமாக தேவைப்பட்டது. அவ்வளவுதான். அதுவே இந்த அரசின் இந்த தடாலடி அரசியல் முடிவுக்குக் காரணம் என்பதை இஸ்லாமிய சகோதரர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

'பொ–பொ'பேரணியில் முஸ்லிம் மக்கள் தமது உணர்வை வெளிப்படுத்தியமைக்கு வெறுமனே 'ஜனாஸா' விவகாரம்தான் காரணம் என்பதில்லை, முஸ்லிம் மக்களையும் உள்ளடக்கியதான சிறுபான்மை தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் பன்முகப்பட்ட வகையில் இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டுவரும் அனைத்து வகையிலான மனித உரிமை மீறல் பிரச்சினைகளும், அவமதிப்புகளும் தான் காரணம் என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இஸ்லாமிய சமூகத்தவரும், இஸ்லாமிய நாடுகளும், இலங்கையின் பௌத்த சிங்கள அடிப்படை வாத அரசியல் குறித்து தொலைநோக்குப் பார்வையுடன் சிந்திக்க வேண்டிய தருணமிது.

முஸ்லிம் எதிர்ப்பை பேரினவாதிகளிடம் தூண்டிவிட்டுப் பேரதிகாரத்துடன் ஆட்சிப் பொறுப்பேற்ற அரசு, ஜனாஸா புதைப்புக்கு அனுமதியளித்த அதேநாளில் தான் இஸ்லாமியரான நீதி அமைச்சர் ஊடாகவே முஸ்லிம் விவாகச் சட்டத் திருத்தம் மற்றும் பொது இடங்களில் புர்கா அணியத் தடை போன்றவை தொடர்பான அறிவிப்பையும் வெளியிட்டமையையும் இஸ்லாமிய நாடுகள் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஜனாஸா புதைப்புக்கான அனுமதி அறிவித்தலை மட்டும் வைத்துக்கொண்டு, ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தின் நியாயத் தேவையை எதிர்க்க இஸ்லாமிய நாடுகள் முடிவுசெய்தல் என்பது எதிர்காலத்தில் மனித உரிமைகளை புறந்தள்ளும் அரசின் திட்ட வரைபுகளுக்கு அங்கீகாரம் அளிப்பதாகிவிடும். இதனை இஸ்லாமிய நாடுகள் புரிந்து கொண்டு முடிவெடுக்க வேண்டும்.



நன்றி - நாமல் அமரசிங்க

# வடமாகாண சுற்றுலாத்துறை சுற்றுலாவிகளுக்காகத் திறப்பு

**யாழ்ப்பாணம், பெப்.27**



**உள்நாட்டு சுற்றுலா பயணிகளுக்காக வடமாகாண சுற்றுலாத்துறை முழுவதுமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது என வடமாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சாள்ஸ் தெரிவித்துள்ளார்.**

வடமாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் விருது வழங்கும் விழா மற்றும் ரியல் நோர்த் ஆவணங்கள் வெளியிடும் வைபவம் என்பவை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஜெற்விங் ஹொட்டல் மண்டபத்தில் இடம்பெற்றன. இவ் வைபவத்தில் வடமாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சாள்ஸ் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார். வடக்கின் 5 மாவட்டங்களினதும் மாவட்டச் செயலர்கள், மேலதிக மாவட்டச் செயலர்கள், வடமாகாண சுற்றுலாத்துறைத் தலைவர் மற்றும் துறைசார் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் சுற்று லாத் துறை, கொவிட் தொற்றுக் காரணமாக பல சிரமங்களை எதிர்கொள்ளத் தொடங்கியது. 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாத் துறைசார் ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்கள் நாடு முழுவதும் துரதிஸ்டவசமான சூழ்நிலையை எதிர்கொண்டார்கள். இத் தொற்றின் சவால்கள் இருந்தபோதிலும் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஈ.எப். எப். ஈ.ரி.எஸ் (EFFECTS) திட்டத்துடன் இணைந்து தொடங்கப்பட்ட இத் திட்டத்தின் மூலம் வடக்கு மாகாண சுற்றுலாத்துறை தன்னை மீண்டும் கட்டியெழுப்புவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். வடமாகாணத்தில் உள்ள 1500 க்கு மேற்பட்ட சுற்றுலாத்துறை நிறுவனங்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள், கொவிட் தொற்று வழிகாட்டுதலுக்கு அமைய வழங்கப்பட்டுள்ளன - என்றார்.

அத்துடன் சுற்றுலாத்துறைசார் ஆவணங்களை வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களுக்கும் தனித்தனியாக திறன்பட உருவாக்கி, இங்கு வெளியிட்டமைக்காக ஈ.எப்.எப்.ஈ.ரி.எஸ் குழுவுக்கும் வடமாகாண சுற்றுலாத்துறை அதிகாரிகளுக்கும் பாராட்டுகளைத் தெரிவித்ததுடன், இங்கு சுற்றுலா வழிகாட்டிகளாக நியமனம் பெறும் ஒவ்வொருவரும் இத் துறையில் தங்களை சரியாக நிலைநிறுத்திக் கொண்டு நாட்டினுடைய மற்றும் வடமாகாணத்தினுடைய எதிர்கால சுற்றுலாத்துறையின் மேம்பாட்டுக்காக பணியாற்ற வேண்டுமென தெரிவித்தார். (ந)

### இளைஞர் கடத்தப்பட்ட விவகாரம்

# ஹிருணிகாவுக்கு எதிரான வழக்கு மார்ச் 10ஆம் திகதியில் விசாரணை

கொழும்பு, பெப். 27

2015ஆம் ஆண்டு டிசெம்பரில் கொழும்பு தெமட்டகொட பிரதேசத்தில் இளைஞர் ஒருவரை வாகனத்தில் கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பாக குற்றச்சாட்டை எதிர்நோக்கியுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிரான வழக்கை எதிர்வரும் மார்ச் 10ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று ஆராயப்பட்டபோதே, அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் குற்றச்சாட்டை எதிர்நோக்கிய ஏனைய 7 பேர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால், அவர்களுக்கு 12 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (ம-இ)



தாயக விருட்சம் சுவிஸ் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் சுவிஸ் நாட்டில் வசித்து வரும் ஜெயமுகன் ஜானுஜா தம்பதிகளின் மகனின் பிறந்த நாளை முன்னிட்டு நெடுங்கேணி கரடிப்பிலவு கிராமத்தில் 21 வயோதிபர்களுக்கான உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. (வ-222)

# நூல் நிலையத் திறப்பும் மாணவர் கௌரவிப்பும்

கைதடி பெப். 27

கைதடி ஸ்ரீசச்சிதானந்த ஆச்சிரமத்தின் நூல் நிலையத் திறப்பும், மாணவர் கௌரவிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆச்சிரம வளாகத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் விருந்தினராக நல்லூர் சிவகுரு ஆதின முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் ஸ்ரீசச்சிதானந்தா சுவாமிகள் வரலாற்று நூலும் வெளியிடப்படவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-288)

# தனிமைச்சட்டத்தை மீறிய 3,242 பேர் இதுவரை கைது!

கொழும்பு, பெப்.27

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் 3 ஆயிரத்து 242 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின் பற்றத் தவறிய குற்றச்சாட்டுகளில் கடந்த 24 மணி நேரத்தில் 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதன்படி, கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரை முகக்கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் இது வரை 3 ஆயிரத்து 242 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (ப)

# தமிழை நிராகரித்தால் தேசிய தலைவரல்லர்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சுட்டிக்காட்டு



**கொழும்பு, பெப். 27**

**தமிழ்மொழி உள்ளிட்ட ஏனைய மொழிகளை நிராகரித்துச் செயற்பட்டால் தம்மைத் தேசியவாதத் தலைவர்கள் என்று பலர் நினைத்துக்கொண்டு உள்ளனர். ஆனால் உண்மை அதுவல்ல என்று சுட்டிக்காட்டினார் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை, முன்னாள் சபாநாயகர் வி.ஜே.மு.லொக்கு பண்டாவுக்கான அனுதாபப் பிரேரணையில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வி.ஜே.மு.லொக்குபண்டார இந்த நாட்டின் பாகுபாடு இல்லாத, அதே வேளை சுதேசிய கொள்கைகளை ஊக்குவிக்கும் தலைவராக வாழ்ந்து காட்டினார். இன்று பலர் இனவாதக் கொள்கையில் இருந்துகொண்டு தனிச் சிங்கள கொள்கையில் இருந்தால் தாம் வீரர்கள் என நினைத்துச் செயற்படுகின்றனர். ஆங்கிலத்தை நிராகரிப்பதன் மூலமும் தமிழ்மொழி உள்ளிட்ட ஏனைய மொழிகளை நிராகரித்து செயற்படுவதனாலும் அவர்கள் தாம் மிகச்சிறந்த தேசியவாதத் தலைவர்கள் என நினைத்துக்கொண்டுள்ளனர். ஆனால் வி.ஜே.மு. லொக்குபண்டார அவ்வாறு இல்லாது சகல மொழிகளிலும் தனது ஆதிக்கத்தை வெளிப்படுத்தினார். அதேநேரம் ஒருபோதும் இலங்கையின் கொள்கையை பிளவு படுத்தவோ, அரசாங்கத்தை விட்டுக்கொடுக்கவோ அவர் முயற்சிக்கவில்லை. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பேசிய நபர் அவர். அவர் ஒரு இலங்கையர் என்ற உணர்வுடன் செயற்பட்டார் என்றார். (ம)

சாவகச்சேரி

# மருத்துவமனை ஊழியர் எவருக்கும் தொற்றில்லை

சாவகச்சேரி, பெப்.27

சாவகச்சேரி மருத்துவமனையில் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்ட மூதாட்டிக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர்கள் உள்பட அங்கு பணியாற்றிய எவருக்கும் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வாரம் மருத்துவமனை விடுதியில் அனுமதிக்கப்பட்ட மூதாட்டிக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அவர் சிகிச்சை பெற்று வந்த பெண்கள் விடுதி மூடப்பட்டு விடுதியில் கடமையாற்றிய மருத்துவர்கள், தாதிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்கள் 30 பேருக்கு சுகாதாரப் பகுதியினரால் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் அவர்களில் எவருக்கும் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வ-9)



# மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு

முல்லைத்தீவு,பெப்.27

முல்லைத்தீவு, கள்ளப்பாடு அ.த.க பாடசாலையில் கடந்த ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

பாடசாலை அதிபர் நடராசா கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களும், நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் இலங்கை வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கிகளின் அலுவலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ-246)

# ஆக்கங்கள் கோரல்

தீவுகள் தெற்கு வேலணை பிரதேச கலாசார பேரவையால் வெளியிடப்படவுள்ள 'தென்தீபம்' - இதழ் 6க்கான ஆக்கங்கள் வேலணை பிரதேசத்தைச் சார்ந்த எழுத்தாளர்கள்,கல்விப்புலம் சார்ந்தவர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் மற்றும் வேலணை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோரிடமிருந்து கோரப்படுகின்றன.

வேலணைப் பிரதேசத்தின் கலை, கலாசாரம், வரலாறு, சமூக வாழ்வியல், தொல்லியல், நாட்டுப்புறவியல், ஆன்மீகம், மரபுரிமைகள் மற்றும் பண்பாட்டு அம்சங்கள் ஆகியவற்றை ஆவணப் படுத்துதல் போன்ற விடயங்களைப் பிரதிபலிக்கும் வகையிலான ஆய்வுக்கட்டுரைகள்,கவிதை, சிறுகதை, ஆவணத் தரவுகள், நேர்காணல்கள் மற்றும் பல்சுவை ஆக்கங்கள் போன்ற ஆக்கங்களை வழங்க முடியும். படைப்பாளிகளின் ஆக்கங்களுக்கு களம் அமைத்துக்கொடுக்கும் வகையிலும், பிரதேசத்தின் தரவுகளை வெளிக்கொணரும் வகையிலும் இவ் இதழ் அமையவுள்ளது. ஆக்கங்களை வழங்க விரும்புவோர் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வேலணை பிரதேச கலாசார பிரிவில் தமது ஆக்கங்களை ஒப்படைக்கமுடியும்.

அத்துடன் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் செயலாளர்,கலாசார பேரவை,கலாசார பிரிவு பிரதேச செயலகம்,வேலணை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என்று பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான க.சிவகரன் தெரிவித்துள்ளார். (ஐ)



சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீமீனாட்சி அம்பாள், ஆலய தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றது. (வ-9)

# ஆபத்தான சாரத்தியம் 12,500 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், பெப்.27

ஆபத்தான முறையில் மோட்டார் சைக்கிளை செலுத்திய குற்றத்துக்காக நபர் ஒருவருக்கு 12 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. யாழ் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி பீற்றர் போல் முன்னிலையில் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் குற்றவாளிக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (வ-319)

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை பாரப்படுத்துங்கள்!

## ஐக்கிய அமெரிக்க இராஜாங்கச் செயலருக்கு வடக்கு கிழக்கு சிவில் சமூக சம்மேளனம் மனு

**யாழ்ப்பாணம், பெப். 27**

**இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் (ஐ.சீ.சீ.) பாரப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியும், சர்வதேச அல்லது வெளிப்புற நியாயாதிக்கத்தினூடாக நீதியை நிலைநாட்டுவதன் பொருட்டு பாதிப்புற்றோருக்கும் அவர்களுடைய பிரதிநிதிகளுக்கும் நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் ஐக்கிய அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்ரனி ஜே.பிலிங்கென்னுக்கு, வடக்கு கிழக்கு சிவில் சமூக சம்மேளனம் மனு அனுப்பியுள்ளது.**

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு, இலங்கையில் நடந்தேறிய கடந்தகால கொடூரமான குற்றங்களின் பொருட்டு ஆதரவு வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைப்பு விடுத்தமைக்காக தங்களுக்கு நன்றி தெரிவிப்பதன் பொருட்டு இதனை நாம் வரைகிறோம்.

இலங்கை தொடர்பான இணை அனுசரணை நாடுகளால் வரையப்பட்டுள்ள தற்போதைய பூச்சிய வரைவுத் தீர்மானத்தில், இலங்கையில் புரியப்பட்டுள்ள கொடூரமான குற்றங்களுக்கான கடந்த காலத்துக்குரிய பொறுப்புக்கூறுதலின் பொருட்டு இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்த வேண்டியமையானது வலியுறுத்தப்படவில்லை என்பதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டியமையை பூச்சிய வரைவுத் தீர்மானத்தில் உள்ளடக்குவதற்குவதற்கு பிரிட்டன், கனடா, ஜேர்மனி, மொன்ரினேக்றோ மற்றும் வட மசிடோனியா அடங்கிய இணை அனுசரணை நாடுகளை இணங்கச் செய்வதற்குத் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு தங்களிடம் வலியுறுத்துகின்றோம்.

நிலைவரத்தின் தீவிரத்தன்மையின் காரணமாக, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டியமையை வலியுறுத்தி ஒரு மாதத்துக்கு முன்னர் நாம் தங்களுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தோம். இந்த அழைப்பானது அண்மையில் வடக்கு கிழக்கு சிவில் சமூக அமைப்புகளால் ஒழுங்குசெய்யப்பட்டு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்குபற்றிய பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி என்ற பேரணியின் மூலமாக வலுச்சேர்க்கப்பட்டிருந்தது.

போர்க் குற்றங்கள், மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இலங்கை அரசால் தமிழ் மக்களுக்கு எதிராகப் புரியப்பட்டுள்ள இனப்படுகொலை ஆகியவற்றின் பொருட்டு நீதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் எந்தவொரு நம்பிக்கையையும் நாம் இழந்துள்ளமையினாலேயே இந்த வேண்டுகோளை நாம் விசேடமாக தங்களிடம் வலியுறுத்திக் கோரியிருந்தோம்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தாமல் விடுதலானது கொடூரமான குற்றங்களைப் புரிந்தோர் நீதியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வழிகோலுவதுடன் மாத்திரமல்லாது, அது இலங்கையின் அரசியல் தலைவர்களும் பாதுகாப்புப் படைப் பிரதானிகளும் தாம் நீதிக்கு முகங்கொடுக்கத் தேவையில்லை என்பதை நன்கறிந்து கொண்டு, எதுவிதத் தயக்கமும் இல்லாமல் தமிழ் மக்களுக்கு எதிரான சர்வதேச குற்றங்களைப் புரிவதற்கான துணிச்சலையும் ஏற்படுத்திவிடும். எனவே இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ஐ.சீ.சீ.) பாரப்படுத்தாமல் விடப்படின் தமிழ் மக்கள் எதிர்கொள்ளவல்ல இந்த அபாயத்தைத் தீவிரமாகக் கவனத்திற் கொள்ளுமாறு வலியுறுத்துகின்றோம்.

மேலும், மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் தற்போதய உயர் ஆணையாளராகிய மிச்சேல் பச்சலெட், கடந்த 27ஆம் திகதியிடப்பட்ட தனது அறிக்கையில், இலங்கையிலுள்ள நிலைவரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ஐ.சீ.சீ.) பாரப்படுத்த வேண்டியமையை நோக்காகக்கொண்டு நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையிடம் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகளுக்கான நான்கு முன்னாள் உயர் ஆணையாளர்கள், ஒன்பது சுயாதீன ஐ.நா. நிபுணர்கள் மற்றும் இலங்கை சம்பந்தமான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் வல்லுநர்கள் குழுவின் சகல உறுப்பினர்களும் அடங்கலாக இருபது முன்னாள் ஐ.நா. அதிகாரிகள் 'போர் விதைகளை விதைத்தல்' எனத் தலைப்பிட்டு 2021ஆம் ஆண்டு மாசி மாதம் 18ஆம் திகதி வழங்கிய தமது அறிக்கையில் இலங்கையானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

"இலங்கையானது தனது நீதித்துறை நிறுவனங்களை அதனுடைய பாதிப்புற்றோருக்காகச் செயற்பட முடியாதவையாக ஆக்கியுள்ளது என்பதே கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். எனவே, சர்வதேச அல்லது வெளிப்புற நியாயாதிக்கத்தினூடாக நீதியை நிலைநாட்டுவதன் பொருட்டு பாதிப்புற்றோருக்கும் அவர்களுடைய பிரதிநிதிகளுக்குமாகப் பணியாற்றுவதற்காக உயர் ஆணையாளரின் பரிந்துரைகளை நாம் மீள வலியுறுத்துகிறோம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐ.சீ.சீ.) போன்ற பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச வழிவகைகள் கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்" என்று குறித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**இலங்கை அரசால், தமிழ் மக்களுக்கு எதிராகப் புரியப்பட்டுள்ள சர்வதேசக் குற்றங்களின் சில உதாரணங்களாக,**

1) ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் பொறுப்புக் கூறுதலுக்கான நிபுணர்கள் குழுவினுடைய 2011ஆம் ஆண்டு பங்குனி மாத அறிக்கையின் பிரகாரம், இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான ஆயுதம் தாங்கிய போரின் இறுதி நிலைகளின்போது போர்க் குற்றங்களும் மனிதநேயத்துக்கு எதிரான குற்றங்களும் புரியப்பட்டுள்ளன என்றும் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இறந்துள்ளனர் என்றும் நம்பத்தகு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2) இலங்கை மீதான நடவடிக்கை தொடர்பான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் உள்ளக மீளாய்வுக் குழுவின் 2012 ஆம் ஆண்டு கார்த்திகை மாத அறிக்கையின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டின் இறுதிக்கட்டப் போரின்போது 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் காணாமல் போயுள்ளனர்.

3) அரசால் போர் சூனிய வலயங்கள் (பாதுகாப்பு வலயங்கள்) எனக் குறித்தொதுக்கப்பட்ட பிரதேசங்களில் இலங்கைப் படையினர் அடுத்தடுத்து குண்டுத்தாக்குதல்களையும் எறிகணை வீச்சுக்களையும் மேற்கொண்ட போது பலர் கொல்லப்பட்டனர். மருத்துவமனைகள் மற்றும் உணவு விநியோக நிலையங்களின் மீது கூடக் குண்டுகள் வீசப்பட்டன. பலர் பட்டினியின் காரணமாக இறந்தனர். மருத்துவ சிகிச்சையின்மையால் குருதிப்பெருக்கு ஏற்பட்டு இன்னும் பலர் இறந்தனர்.

4) 2017ஆம் ஆண்டு மாசி மாதம் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேசக் கருத்திட்டமானது (ஐ.ரீ.ஜே.பீ.) தமிழ்ப் பெண்கள் பாலியல் அடிமைகளாக கையாளப்பட்டு இலங்கை இராணுவத்தினரால் நடத்தப்பட்ட கற்பழிப்பு முகாங்கள் பற்றிய விவரங்களை ஐ.நா. விடம் கையளித்தது.

5) ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொது நலவாய அலுவலகத்தின் 2013 ஆம் ஆண்டு சித்திரை மாதத்துக்குரிய அறிக்கைக்கு அமைவாக, இலங்கையில் 90 ஆயித்துக்கும் மேற்பட்ட போர் மூல விதவைகள் உள்ளனர்.

6) குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் அடங்கலாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல்போயுள்ளனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ஐ.நாவின் பணிக்குழுவானது உலகில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் இரண்டாவது அதிகூடிய எண்ணிக்கை இலங்கையில் உள்ளது எனத் தெரிவித்துள்ளது. சர்வதேச குற்றங்களுக்குரிய பொறுப்புக்கூறல் தொடர்பாக இலங்கை அரசால் வழங்கப்பட்டுள்ள பொய்யான வாக்குறுதிகளின் வரலாறுகள் இவை.

அடுத்துவந்த இலங்கை அரசுகள், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளமையையும் தங்களுடைய கவனத்துக்குக் கொண்டுவருகின்றோம்.

முன்னய அரசு, அது இணை அனுசரணை வழங்கிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியது மாத்திரமல்லாது, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசின் சிரேஷ்ட உறுப்பினர்களும், தாம் யூ.என்.எச்.ஆர்.சீ. தீர்மானத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் எனத் திரும்பத்திரும்பவும் ஆணித்தரமாகவும் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய புதிய அரசு ஒருபடி கூடுதலாகச் சென்று தீர்மானங்கள் 30/1, 34/1 மற்றும் 40/1 களுக்குரிய இணை அனுசரணையிலிருந்து விலகியுள்ளதுடன் யூ.என்.எச்.ஆர்.சீ. பொறுப்புக்கூறல் செயற்பாட்டிலிருந்தும் வெளிநடப்புச் செய்துள்ளது.

மேலும், யூ.என்.எச்.ஆர்.சீ. இனை இழிவுபடுத்தும் விதமாக, சிறுவர்கள் அடங்கலாக பொதுமக்களைக் கொலை செய்தமைக்காக தண்டிக்கப்பட்டு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டிருந்த ஒரேயொரு படைச்சிப்பாயும் தற்போதய ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், போர்க் குற்றங்கள் புரிந்தமைக்காக நம்பத்தகு முறையில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பல்வேறு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. 'போர் வீரர்கள்' ஆகவும் மதிப்பளிக்கப்படுகிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் போர்க் குற்றாவாளியாக சந்தேகிக்கப்படுகின்ற ஓர் அலுவலர் நான்கு நட்சத்திர அதிபதியாக பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளுக்கான மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான இணைஅனுசரணை நாடுகளிடம் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ஐ.சீ.சீ.) பாரப்படுத்த வேண்டியமையை தாங்கள் வலியுறுத்துவீர்களாயின் தங்களுக்கு நன்றிகூற நாம் கடமைப்பட்டுள்ளோம். **- என்றுள்ளது.** (கு)

# பிள்ளைகளைக் காட்டினால் ஜனாதிபதியுடன் பேசத் தயார்

## உறவுகள் சங்கம் தெரிவிப்பு

**வவுனியா, பெப். 27**

**துண்டுப்பிரசுரம் ஒன்றில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கு அருகில் இருந்த நான்கு தமிழ்ச் சிறுமிகளை எங்களுக்குக் காட்டினால், ஜனாதிபதி கோத்தாபயவுடன் பேசுவது தொடர்பாகச் சிந்திப்போம். இவ்வாறு வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.**

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுடன் கலந்துரையாடலை முன்னெடுக்கவுள்ளார் என்று வெளிவந்துள்ள தகவல் தொடர்பாக மேலும் தெரிவித்த உறவுகள்;

நான்கு சிறுமிகளில் ஒருவர் ஜெயவனிதாவின் மகள். ஜனாதிபதி அந்தச் சிறுமியைக் காட்டினால், எங்களுடன் பேசுவதற்கான அவரது அழைப்பை நாங்கள் ஏற்றுக் கொள்வோம். குறைந்த பட்சம் கடந்த ஏழு தசாப்தங்களாக இலங்கை அரசுடன் பேசி ஏமாற்றமடைந்த வரலாறு எங்களுக்கு உண்டு. கடைசியாக 2017 ஆம் ஆண்டில் இலங்கை அரச பிரமுகர்களை அலரி மாளிகையில் சந்தித்தோம். அப்போதும் அரசால் நாங்கள் ஏமாற்றப்பட்டோம். ஜெயவனிதாவின் மகளைக் காண்பிப்பதன் மூலம் ஜனாதிபதி எங்களுக்கு உண்மையான முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம் - என்றனர். (ப-110)



புத்தாக்க அரங்க இயக்கத்தினரின் வெளியீடாக எஸ்.ரி.குமரன் மற்றும் எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரை பிரதம ஆசிரியர்களாகக் கொண்டு வேடதாரி எனும் அரங்க சஞ்சிகை வெளிவந்துள்ளது. சஞ்சிகையின் முதல் பிரதி ஈழத்தமிழ் அரங்கின் பிதாமகர் அரங்கத் தாய் என சிறப்பிக்கப்படுகின்ற குழந்தை ம.சண்முகலிங்கத்திடம் அண்மையில் கையளிக்கப்பட்டது. (ஐ)

# 22 மில்லியன் மக்களுக்கும் தடுப்பூசி வழங்க வேண்டும்!

*அதன் பின்னரே நான் ஏற்றிக்கொள்வேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சபதம்*

கொழும்பு, பெப். 27

22 மில்லியன் மக்களுக்குமான கொரோனாத் தடுப்பூசிகள் நாட்டுக்குள் வரும்வரையில் நான் அதை ஏற்றிக்கொள்ள மாட்டேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தெஹிவளையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சஜித் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும், நாட்டைப் பாதுகாப்பதற்கும் முன்னிற்பேன் என்று நான் பல சந்தர்ப்பங்களில் தெரிவித்திருக்கின்றேன். எனக்கு முன் நாட்டு மக்களுக்கு முன்னுரிமை தருவேன் என்று மிகத் தெளிவாகச் சொன்னேன். அதனை நடைமுறைப்படுத்தும் வகையிலேயே கொரோனாத் தடுப்பூசி விவகாரத்தைக் கையாண்டுள்ளேன். எனக்கு முதல் இந்த நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் தடுப்பூசிகள் வழங்கப்பட வேண்டும். 22 மில்லியன் மக்களுக்காகவும் இந்தத் தடுப்பூசிகள் அனைத்தும் இந்த நாட்டில் தரையிறங்கும் வரை தடுப்பூசி பெற நான் தயாராக இல்லை. ஏனென்றால், தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம், அனைத்து விடயங்களிலும் மக்களுக்கே முன்னுரிமை என்ற விடயத்தை உறுதிப்படுத்த இதுவே நல்ல சந்தர்ப்பம் என உறுதியாக நம்புகின்றேன் என்றார். (ம)



# குச்சவெளியில் சிரமதானம்

"இளைஞர்களினூடாக பிரதேசத்தை அழகு படுத்துவோம்" என்ற தொனிப்பொருளில் குச்சவெளி பிரதேசத்தின் கும்புறுப்பிட்டி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வளாகத்தில் நேற்று சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் குச்சவெளிப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் 'ஒன்றிணைவோம் இலங்கை' திருகோணமலை மாவட்ட அமைப்பின் ஏற்பாட்டில், பிரதேச இளைஞர்கள் மற்றும் பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்புடன் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதில் குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர், குச்சவெளி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர், முன்னாள் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவரும் 'ஒன்றிணைவோம் இலங்கை' அமைப்பின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் மற்றும் பிரதேச இளைஞர் யுவதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ப)

# சா/த பரீட்சைக்கான ஏற்பாடுகள் பூர்த்தி



கொழும்பு, பெப்.27

கல்வி பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையை சுகாதாரப் பாதுகாப்புடன் நடத்துவதற்குத் தேவையான அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சர், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

முன்னாயத்த நடவடிக்கையாக அனைத்து மாவட்டங்களிலும் தலா இரண்டு விசேட பரீட்சை நிலையங்களை நிறுவவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 4 ஆயிரத்து 513 நிலையங்களில் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

மேலதிக பரீட்சை நிலையங்களை நிறுவுவதற் காக மாகாண ரீதியில் 50 மில்லியன் ரூபாவுக்கும் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறை உரிய வேளைக்குப் பிந்தியே பரீட்சை நடத்தப்படுகின்றமையால், எதிர்வரும் ஜூன் மாதம் பெறுபேறுகள் வெளியிடப்படும். ஜூலை மாதம் உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்கப்படும். கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் கிடைக்காத பரீட்சார்த்திகள் doenets.lk என்ற இணையதள முகவரிக்குள் பிரவேசித்து தங்களுக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (க-இ)



கைதடி குருசாமி வித்தியாலயத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்கான பிரிவுபசாரவிழா ஆசிரியர் நலன்புரிச் சங்கத் தலைவர் க.இந்திரராசா தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ம-159)

## மோ.சைக்கிள் இறக்குமதி

# தடைகளை உடன் நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, பெப்.27

மோட்டார் சைக்கிள் இறக்குமதிக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் பல சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் எனவும், அது தொடர்பில் கலந்துரையாடி தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பை வழங்குமாறும் இலங்கையின் வாகன இறக்குமதியாளர் சங்கம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இறக்குமதியாளர் சங்கம் மேலும் தெரிவித்ததாவது,

மோட்டார் சைக்கிள் இறக்குமதி நடவடிக்கைகளுக்கு கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் வாகன இறக்குமதியாளர்கள் மற்றும் அத்துறைசார் ஏனைய தொழிலாளர்கள் அனைவரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வாகன இறக்குமதியாளர்களும், அதுசார்ந்த சேவை வழங்குநர்களும், தமது வணிக வளாகத்தைப் பராமரித்தல், வங்கிக் கடன்கள், வாடகை மற்றும் ஊழியர்களின் சம்பளத்தை செலுத்துவதிலும் பெரிய சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த தடையானது மேலும் தொடருமாயின், இறக்குமதியாளர்கள் அவர்களது வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்துவதோடு மட்டுமன்றி தங்களது ஊழியர்களையும் பணிநீக்கம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும்.

இதனால் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஒரு லட்சம் பேரின் தொழில் வாய்ப்புகள் இல்லாமல் போவதுடன், அவர்களைச் சார்ந்துள்ள சுமார் 4 இலட்சம் பேர் பாதிக்கப்படுவர்-என்று தெரிவித்துள்ளது. (ம-இ)

### சர்வதேசத்தால்

# தனிமைப்படுத்தப்பட்டுவரும் நாடாக மாறுகிறது இலங்கை

### முன்னாள் சபாநாயகர் கவலை



**கொழும்பு,பெப்.27**

**இலங்கை சர்வதேசத்தால் தனிமைப்படுப்பட்டுவரும் நாடாக மாறி வருகிறது என்று சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் தலைவரும், முன்னாள் சபாநாய கருமான கருஜயசூரிய தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிக்குண்டுள்ள நூல் பந்துபோல், எமது நாடு அனைத்துப் பக்கங்களாலும் சிக்குப்பட்டிருக்கின்றது. ஒரு பக்கத்தால் கொவிட் தொற்று காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். பொருளாதாரம் வீழ்ச்சிக்குள்ளாகி இருக்கின்றது. வாழ்க்கைச்செலவு உயர்ந்துள்ளது. 3 வேளையும் உண்ணாமல் இருக்கும் பல குடும்பங்கள் இன்று எமது நாட்டில் இருக்கின்றன. இவ்வாறு ஒரு பக்கத்தால் நாடு சிக்கிக் கொண்டிருக்கையில், அடுத்த பக்கமாக, உலகில் பலம்மிக்க நாடுகள் சில இலங்கைக்கு எதிராக மனித உரிமை பேரவையில் அறிக்கை சமர்ப்பித்திருக்கின்றன. அதில் பொருளாதாரத் தடை விதிப்பது தொடர்பாகப் பேசப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஏதாவது தீர்மானத்துக்கு வந்தால், அதில் பாதிக்கப்படப்போவது நாட்டின் ஆட்சியாளர்களோ அரசியல்வாதிகளோ அல்ல. சாதாரண மக்களாகும். இன்று எமது நாடு, பல நட்பு நாடுகளை இழந்திருக்கின்றது - என்றார். (க-இ)

# தாவரங்களில் கைவைத்தால் சட்டம் பாயும்

### வனப் பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, பெப்.27

தாவரங்களை அழிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது என வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராக தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தொடர்ந்து இடம்பெறும் தாவர அழிப்புச் செயற்பாடுகளை நிறுத்துவது குறித்து, பொலிஸ்மா அதிபருக்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. வன அழிப்பைத் தடுப்பதற்காக, தேவையான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சோதனைகளை முன்னெடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ப)

# நெடுந்தூரப் போக்குவரத்துக்கள் போதனா வீதியால் இடம்பெறாது

### நாளைமறுதினம் முதல் நடைமுறை

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்ப்பாண நகரப் பகுதியில் நாளை மறுதினம் முதலாம் திகதி முதல் நெடுந்தூர போக்குவரத்தில் இறுக்கமான நடைமுறை பின்பற்றப்படும் என யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்;

வெளிமாவட்டங்களில் இருந்து வந்து செல்லும் பேருந்துகள், யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியால் உள் நுழைவது மற்றும் வெளிச் செல்வது மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. நடைமுறைகளை மீறுவோர் மீது பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். அத்தோடு வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நெடுந்தூர பேருந்து நிலையத்துக்கு வருகை தந்து தமது பயணங்களை மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ப-20)

### அதிபர்சேவை தரம் III

# தமிழர்கள் புறக்கணிப்பு சந்திரகாந்தனிடம் முறையீடு!

கொழும்பு, பெப். 27

மைத்திரி - ரணில் ஆட்சியில் அதிபர் சேவை வகுப்பு மூன்றுக்கு உள்வாங்கப்பட்ட அதிபர்களில் தகைமை பெற்ற தமிழ்மொழி மூலமான விண்ணப்பதாரிகள் புறக்கணிக்கப்பட்டனர் என்று சிலர் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனிடம் முறையிட்டுள்ளனர்.

அரச பாடசாலைகளில் நிலவும் அதிபர் சேவை III வெற்றிடத்தை நிரப்பும் வகையில் கடந்த அரசாங்கத்தினால் அரச வர்த்தமானி மூலமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு பரீட்சை நடாத்தி நியமனம் வழங்கப்பட்டன.

தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலங்களில் நிலவும் அதிபர் சேவை வெற்றிடங்களை அந்தந்த மொழி மூல விண்ணப்பதாரிகளைக் கொண்டு வெவ்வேறாக நிரப்படுமென மத்திய கல்வியமைச்சினால் வெளியிடப்பட்ட இலங்கை அதிபர் சேவை குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், தமிழ்மொழி மூலமான வெற்றிடங்களை தமிழ் மொழி மூல விண்ணப்ப தாரிகளைக் கவனத்தில் கொள்ளாமல் சிங்கள மொழி மூலமானமான வர்களுக்கு கணிசமான அளவு நியமனம் வழங்கப்பட்டது என்று மேற்படி சந்திப்பில் கலந்துகொண்டவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-150)

# மதுபானம் கடத்தியவருக்கு 25,000 தண்டம்!

யாழ்ப்பாணம், பெப்.27

அனுமதிப் பத்திரமின்றி மதுபானப் போத்தல்களை கொண்டு சென்ற குற்றச்சாட்டில் நபர் ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் நேற்றுமுன்தினம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் நீதிபதி பீற்றர் போல் முன்னிலையில், இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில், இந்தத் தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை, அனுமதிப்பத்திரமின்றி மரக்குற்றிகளை ஹன்டர் வாகனத்தில் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில், நபர் ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-319)

# சேவையில் ஈடுபடாவிடில் அனுமதிப்பத்திரம் ரத்தாகும்

### தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு,பெப்.27


கொரோனா அசாதாரண சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்தி, பொதுமக்களுக்கு போக்குவரத்துச் சேவையை வழங்காத தனியார் பேருந்துகளின் அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்படும். அதனை புதிய பேருந்து உரிமையாளர்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பிரசன்ன சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

தற்போது மேல் மாகாணத்தில், அதிகமான தனியார் பேருந்து உரிமையாளர்கள், தமது பேருந்துகளை காலையும், மாலையும் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களின் போக்குவரத்துப் பணிகளுக்கு ஈடுபடுத்தி வருகின்றனர். அதன் பின்னரே, பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுகின்றனர். இதனால் பொதுமக்கள் போக்குவரத்து நெருக்கடியில் உள்ளனர். அதனடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# இலங்கைக்கு எதிரான பிரேரணை: எதிர்ப்புத் தெரிவித்து கவனவீர்ப்பு

கொழும்பு, பெப். 27

பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளின், இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொழும்பில் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. கொழும்பில் அமைந்துள்ள பிரித்தானியத் தூதரகத்துக்கு முன்பாக 'மக்கள் பொறுப்பு மையத்தின்' உறுப்பினர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் இடம்பெற்று வருகிறது. இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் நேற்றுமுன்தினம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த அறிக்கையை முற்றாக நிராகரிக்கிறோம் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன அறிவித்தார். இலங்கைக்கு எதிரான பிரேரணையும் பிரிட்டன் தலைமையில் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேற்படி போராட்டம் நடத்தப்பட்டது. (ம)



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஊர்காவற்றுறை தொகுதிக் கிளையின் செயலாளரும், வேலணை பிரதேச சபை உறுப்பினருமாகிய கருணாகரன் நாவலனின் நிதியுதவியில் வேலணை கிராமத்தில் வாழ்கின்ற 250 குடும்பங்களுக்கு 500 வாழை மரங்கள் வழங்கப்பட்டன. கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந் நிகழ்வில், தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்களான கருணாகரன் குணாளன் மற்றும் சண்முகராஜா தரங்கன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ந-25)

# சுழிபுரத்தில் இரண்டு உணவகங்களுக்கு 'சீல்'

## மல்லாகம் நீதிமன்று உத்தரவு

**வலி.தென்மேற்கு, பெப்.27**

**சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய இரண்டு உணவகங்களை மூடி சீல் வைக்குமாறும் உணவகத்தின் உரிமையாளர்களை தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்ட நீதிவான் வழக்கு விசாரணையை அடுத்த மாதத்துக்கு ஒத்திவைத்துள்ளார்.**

வலிகாமம் மேற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அ.தர்மிலன், சுழிபுரம் வடக்கம்பிராய் பகுதியில் உள்ள இரண்டு உணவகங்களை சோதனைக்கு உட்படுத்தியபோது பல குறைபாடுகளுடன் உணவகங்கள் இயங்கி வருவது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து இரண்டு உணவகங்களின் உரிமையாளர்கள் மீதும் 12 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இரண்டு உணவகங்களையும் மூடி சீல் வைக்குமாறும் உணவக உரிமையாளர்களை தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்ட நீதிவான் வழக்கை அடுத்த மாதத்துக்கு ஒத்திவைத்துள்ளார்.

இதேவேளை சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் இயங்கிய பேக்கரி உரிமையாளருக்கு எதிராக நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பேக்கரி உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து நீதிவான் அவருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார். (ப-115)

## வரணியில் திருட்டுக்கள் தாராளம்; மாணவியின் சைக்கிளும் அபேஸ்


கொடிகாமம், பெப் 27

தென்மராட்சி, வரணிப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் நேற்று முன்தினமும் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றுக்குச் செல்லும் மாணவி ஒருவர் சைக்கிளை வரணி அம்மாகடைப் பகுதியில் பூட்டுப் போட்டு நிறுத்திவிட்டு, பேருந்தில் பாடசாலை சென்றுள்ளார். பாடசாலை முடிவடைந்த பின்னர் மீண்டும் வந்து பார்த்தபோது, நிறுத்தி வைக்கப்பட்ட சைக்கிள் திருட்டுப் போயிருந்தமை தெரியவந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் குறித்த சைக்கிள் தூக்கிச் செல்லப்பட்டது என்றும், குறித்த மோட்டார் சைக்கிளின் நம்பர் தகடு மறைக்கப்பட்டிருந்தது என்றும், சம்பவத்தை அவதானித்த சிலர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப-159)



## நேர்முகத் தேர்வு

திருகோணமலை,பெப்.27

ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் மூன்றாம் கட்ட நியமனம் வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு நேற்றுமுன்தினம் திருகோணமலை தம்பலகாமத்தில் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ஜே.ஶ்ரீபதி தலைமையில் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் இளையோர்கள் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

## அகலிக்கப்படும் ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் இருந்து இராசாவின் தோட்டம் வரையான ஸ்ரான்லி வீதியை அகலிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வர்த்தகர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் வீதியின் இரு பக்கங்களிலும் வர்த்தக நிலையங்களுக்கான வாகனத்தரிப்பிடம், பாதசாரிகள் நடைபாதை மற்றும் வடிகாலமைப்பு வசதியுடன் இந்த வீதி அகலிக்கப்படவுள்ளது.

இதுதொடர்பில் அண்மையில் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அதன் பிரகாரம் வீதியின் இரு பக்கங்களிலும் எல்லைக் கோடு இடும் பணி நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றதுடன் அகலிப்புக்கான பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ற-இ)

### பொ-பொ பேரணி

## அனந்தியிடமும் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், பெப்.27

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்தில் கலந்துகொண்ட ஈழத்தமிழர் சுயாட்சி கழகத்தின் தலைவி அனந்தி சசிதரனிடம் புதுக்குடியிருப்பு பொலிஸார் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டை பண்ணாகத்தில் அமைந்துள்ள அனந்தி சசிதரனின் வீட்டுக்குச் சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார், குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டமை மற்றும் நீதிமன்ற தடை உத்தரவை மீறி போராட்டத்தில் கலந்து கொண்டமை தொடர்பில் வினவியுள்ளனர். மக்கள் பிரதிநிதிகளாக இருக்கும் அரசியல்வாதி என்ற அடிப்படையில் மக்கள் முன்னெடுத்த போராட்டத்தில் தாம் கலந்து கொண்டதாகவும், இறுதி யுத்தத்தில் தனது கணவன் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துக்குப் பின்னர் தற்பொழுதும் தனது கணவரைத் தேடி வருகிறேன் எனவும், இது போன்ற மக்கள் போராட்டங்களில் தான் கலந்துகொள்வது வழமையான ஒன்று எனவும் அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார். (ந-25)

## மதுபோதையில் சாரத்தியம்

### ஐவருக்கு தலா தண்டம் ரூ. 25,000

யாழ்ப்பாணம், பெப்.27

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்துக்காக ஐவருக்குத் தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் யாழ் நீதிவான் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவருக்கு கடும் எச்சரிக்கையுடன் ரூபா 25 ஆயிரம் தண்டமும், நால்வருக்கு தலா 25 ஆயிரம் வீதம் தண்டமும் விதிக்கப்பட்டது. யாழ் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி பீற்றர்போல் முன்னிலையில் நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் இந்த தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை மற்றொரு வழக்கில் மதுபோதையில் வாகனம் செலுத்திய நபர் ஒருவர் ரூபா 25 ஆயிரம் ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (வ-319)

## வீதி விபத்தில் இளைஞர் காயம்

சாவகச்சேரி,பெப்.27

உழவு இயந்திரமும்,மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு தனங்களப்பு ஏ-32 வீதியில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு காயமடைந்தார். இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ)

## பண்டத்தரிப்பில் இன்று குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 1 மணி வரை குருதிக் கொடை முகாம் இடம்பெறவுள்ளது.

ஈழத்தின் முற்போக்குப் பெண் எழுத்தாளரும், நாடக நடிகையும், நெறியாளரும் சமூக செயற்பாட்டாளருமான கலாலக்ஷ்மி தேவராஜாவின் ஞாபகார்த்தமாகவே இந்த குருதிக்கொடை நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்த குருதிக் கொடை நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ற-இ)

ஒரே நாடு ஒரே சட்டம் ஊடாக

# பௌத்தத்துக்கான முன்னுரிமை இல்லாமல் ஆக்கப்படுகின்றதா?

## சந்தேகம் கிளப்புகிறார் ரணில்

**கொழும்பு,பெப்.27**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான உண்மைத் தகவல்களை வெளியிடாத ஜனாதிபதி ஆணைக்குழு, 'ஒரு நாடு ஒரு சட்டம்' எனப் பரிந்துரைகளைக் கொண்டு வெறும் ஆவணத்தை வெளியிட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க குற்றஞ் சாட்டியுள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம் பெற்ற அன்று, பாதுகாப்புப் பிரிவுகளைக் கொண்டு, அதன் பின்னர் தாக்குதல் இடம்பெறாத வகையில், தடுக்க எடுத்த நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் எவையும் ஆணைக்குழுவின் அறிக்கையில் இல்லை.

'ஒரு நாடு ஒரு சட்டம்' என்பதை அமுல்படுத்துவதன் மூலம், அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை இரத்துச் செய்ய, ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைக்கிறதா என்ற கேள்வி உள்ளது.

சிங்கள தமிழ் புத்தாண்டுக்கு முன்னர், ஏப்ரல் 9 ஆம் திகதி, பாதுகாப்புச் சபை கூடியபோது, தாக்குதல் மேற்கொள்ளப்பட உள்ளது எனக் கிடைக்கப்பெற்ற எந்தவொரு தகவல் குறித்தும் கலந்தாலோசிக்கப்படவில்லை. இராணுவப் பிரதானி மற்றும் குற்ற விசாரணைத் திணைக்கள உயரதிகாரிகள் ஆகியோர் உள்ளிட்ட நாட்டின் பாதுகாப்பு தொடர்பான சகலரும் அந்தக் கூட்டத்தில் வெளியிடாத விடயங்கள் குறித்து அதன் பின்னர் கலந்துரையாடினரா என்பதைக் கூற முடியாது.

பாதுகாப்புச் சபை கூடியபோது, தாக்குதல் தொடர்பில் அறிந்திருந்தால், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து ஏதேனும் தாக்குதல் சம்பவம் நடத்தப்படுமாயின், அதற்கான முழுப் பொறுப்பையும் அவர்கள் ஏற்கவேண்டும் என்று கூறியிருக்க முடியும் -என்றார். (க-இ)

# ஜனாஸா எரிப்பதை நிறுத்தியமை ஹக்கீம் கட்சிக்கு படு தோல்வி

## சாடுகிறது உலமா கட்சி

கொரோனாவால் உயிரிழப்பவர்களின் ஜனாஸாக்களை எரிப்பதை நிறுத்தியமை ஹக்கீமுக்கும், அவரது கட்சிக்கும் படுதோல்வி விடயம். அதனால் மீண்டும் எரிக்கும் நிலையைக் கொண்டு வர இனவாதிகளை உசுப்பேத்துவர். எனவே புத்திசாலித்தனமாய் வாழ்வோம். இவ்வாறு உலமா கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதி கிடைத்தமைக்காக முதலில் இறைவனுக்கு நன்றி சொல்லுங்கள். அதன்பின் இதனை அரசியலாக்கி முஸ்லிம்களை உசுப்பேற்றாமல் அரசை அணுகிய ஆளுந்தரப்பு அரசியல்வாதிகளுக்கும் நன்றி சொல்லுங்கள். எடுத்ததற்கெல்லாம் பிரதமர் மஹிந்த, ஜனாதிபதி கோத்தாவில் பழி போடாதீர்கள். விதண்டாவாதம் புரியவும் வேண்டாம். இதே வர்த்தமானி அறிவிப்பை மீண்டும் எரிப்பது மட்டுமே என்று மாற்றுவது அரசுக்கு பெரிய வேலை இல்லை. அவ்வாறு நடக்காமல் இருப்பது முஸ்லிம்களின் நடவடிக்கைகளில் தான் உள்ளது. -என்றார். (க-இ)

# அறிக்கையின் முதல் பிரதி சட்டமா அதிபரிடம் கையளிப்பு

**கொழும்பு,பெப்.27**

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் முதல் பிரதி சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளரால் குறித்த அறிக்கை, சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டது என்று சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி அரச சட்டத்தரணி நிஷாரா ஜெயரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும் ஆணைக்குழுவின் அறிக்கையின் ஏனைய (25) பிரதிகளையும், சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஒப்படைக்குமாறு, சட்டமா அதிபர் ஜனாதிபதி செயலாளருக்கு அறிவித்துள்ளார். (க-இ)

# மக்கள் எதிர்பார்த்த அறிக்கை இதுவல்ல

## மஹிந்த அமரவீர தெரிவிப்பு

**கொழும்பு,பெப்.27**

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவிடமிருந்து, மக்கள் எதிர்பார்த்தது இவ்வாறான அறிக்கையல்ல.

இந்த அறிக்கை, திருப்தியான அறிக்கையென்று நான் நம்பவில்லை.

இவ்வாறு சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சுற்றாடல் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த ஆணைக்குழு குறித்தோ, நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்தோ எந்தவோர் அபிப்பிராயத்தையும் நான் முன்வைக்கப் போவதில்லை.

அறிக்கை தொடர்பில் எமக்குள் முரண்பாடுகள் பல உள்ளன. அத்துடன் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சில விடயங்களுடன் எம்மால் இணங்க முடியாதுள்ளது. -என்றார். (க-இ)

# 15 வயதானோருக்கு அடையாள அட்டை

## ஆணைக்குழு பரிந்துரை

**கொழும்பு,பெப்.27**

நாட்டில் 15 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கும், அவர்கள் குறித்த சகல தரவுகளையும் உள்ளடக்கி தேசிய அடையாள அட்டை விநியோகிக்கப்பட வேண்டும் என்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைகுழு பரிந்துரைத்துள்ளது.

உலகின் பல நாடுகள் இலத்திரனியல் அடையாள அட்டைகளை அறிமுகம் செய்துள்ளன. அதனடிப்படையில் இலங்கையிலும் திட்டங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும். 15 வயதுக்கு மேற்பட்டோருக்கு அடையாள அட்டை அவசியம். இதனை வருடா வருடம் புதுப்பிக்க வேண்டும் எனவும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (க-இ)

# நாடாளுமன்றத்துக்கு செல்ல வேண்டும் ரணில்

## கட்சியின் மூத்த உறுப்பினர்கள் வலியுறுத்தல்

**கொழும்பு, பெப். 27**



கடந்த அரசாங்கத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள், ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்றிட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உடன்படிக்கைகள் ஆகியவை தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்த வேண்டுமாயின் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் செல்லவேண்டுமென கட்சியின் மூத்த உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் வலியுறுத்தினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

'முன்னாள் பிரதமர் ரணில் பெற்றுள்ள நாடாளுமன்ற அனுபவம் வேறு எவரிடமும் இல்லை. உள்நாட்டில் மட்டுமல்லாது உலக நாடாளுமன்ற சம்பிரதாயங்களையும் நன்கறிந்த, அனுபவமுள்ள முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றம் செல்வதற்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்குக் பல்வேறு நோக்கங்கள் உள்ளன.

கடந்த அரசாங்கத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள், ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்றிட்டங்கள், வெளிநாட்டு உடன்படிக்கைகள் தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்த வேண்டுமாயின் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் செல்லவேண்டும். -என்றனர். (ம-இ)

# அனைத்து வாக்காளர்களும் வாக்களிப்பது கட்டாயம்

## ஆணைக்குழு பரிந்துரை

**கொழும்பு,பெப்.27**

இலங்கையின் தேர்தல் முறைமையில், அனைத்து வாக்காளர்களும், சகல தேர்தல்களிலும் வாக்களிப்பது கட்டாயம். இதற்கான சட்டக் கொள்கைகள் உருவாக்கப்பட்ட வேண்டும் என்று உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தாக்குதலை நடத்திய சஹ்ரான் உள்ளிட்ட குழுவினர், வாக்களிப்புகளில் ஈடுபடவில்லை என்று சாட்சியங்கள் கிடைத்துள்ளன. அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் வாக்களிக்கச் செல்லாமல் தடுக்கப்பட்டுள்ளனர். அதனடிப்படையில் ஆணைக்குழு இந்தப் பரிந்துரையை முன்வைத்துள்ளது.

அதேவேளை தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராடுவதற்காக நிலையான அரசு அவசியம். பலவீனமான அரசு காணப்பட்டதன் காரணமாக, இலங்கையில் தாக்குதல்களை நடத்தலாம் என்று சஹ்ரானின் குழு எண்ணியமைக்கான சாட்சியங்கள் கிடைத்துள்ளன என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-இ)

## இன்றைய நாள்

**மேடம்:** குடும்பத்தினர் உங்களை அனுசரித்து நடந்து கொள்வார்கள். பரணி: தம்பதிகளிடையே ஒருங்கிணைந்த எதிர்காலத்திட்டம் உருவாகும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**இடபம்:** சக வியாபாரிகள் மூலம் ஏற்பட்ட தடைகள் குறையும். புதிய முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் விரைந்து முன்னேறுவீர்கள் திடீர் செலவுகள் வந்தாலும் கடன் வாங்க வேண்டாம்.

**மிதுனம்:** சக ஊழியர்களால் சிறு சிரமங்கள் ஏற்பட்டு சரியாகும். இளைஞர்களுக்கு எதிர்பார்த்ததை விட வெற்றி வாய்ப்பு கூடும். தொட்டது துலங்கும். நண்பர்களுடன் வருத்தம் வரலாம்.

**கடகம்:** பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்ட முயற்சிப்பீர்கள். சாலையில் வண்டி ஓட்டும்போது சற்று கவனம் தேவை. மனம் இரங்கி நன்மை செய்வீர்கள்.

**சிம்மம்:** அலுவலக விஷயத்தில் இருந்த வீண் கவலை தேவையே இல்லை. பல விஷயங்களில் முன்பு இருந்த பிரச்சினையில் இருந்து மீண்டு வருவீர்கள்.வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கன்னி:** சிலருக்கு திடீரென்று முன்பிருந்த பிரச்னைகள் தீரும். மற்றவர்கள் விஷயத்தில் தலையிடுவதால் பழி ஏற்படலாம். நல்லவர்கள் யார் என்பதை கண்டறிய முயலுங்கள்.

**துலாம்:** முக்கிய முடிவுகளை சரியான நேரத்தில் எடுப்பீர்கள். சக ஊழியர்களால் வீண் பழி நேராமல் பார்த்துக் கொள்ளுங்கள். அவ்வப்போது தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**விருச்சிகம்** மிகக் குழப்பமான சமயத்தில் சரியான வழிகாட்டல் கிடைக்கும். உறவினர் ஒருவருக்கு ஏற்பட்ட பிரச்சினையைத் தீர்ப்பீர்கள். நன்மைக்காக எடுத்த திட்டம் அனுகூலமாக முடியும்..

**தனுசு** சிலருக்கு வாடிக்கையாளர்களால் சந்தோஷங்கள் ஏற்படக்கூடும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். பயங்கள் நீங்கும். முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும்.

**மகரம்** உங்களின் பெருந்தன்மையால் தொல்லைகள் நீங்கும். சகோதரி மூலம் எதிர்பார்த்த விஷயம் வெற்றியாகும். நண்பர்கள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு..

**கும்பம்:** நண்பர்கள் இடையே ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் நீங்கும் யாரைப் பற்றியாவது புறம் பேசி வம்பில் மாட்டிக் கொள்வீர்கள். பெரிய அளவில் புது முதலீடு செய்வதைத் தவிர்க்கலாம்.

**மீனம்:** வேலைச்சுமை அதிகரிக்கும். தீய வழியில் செல்ல வேண்டாம். அலுவலகத்தில் கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். நண்பர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

# வல்லவர்கள் வேண்டாம் நல்லவர்களே வேண்டும்

## தவக்கால சுற்றுமடலில் யாழ் ஆயர்

நாம் எமது வாழ்வில் நல்லவற்றைச் செய்பவர்களாக வாழ வேண்டும். நன்மையான செயற்பாடுகள் புரிபவர்களாக இருக்க வேண்டும்.

இதையே நான் வல்லவர்கள் எமக்கு வேண்டாம் நல்லவர்கள்தான் வேண்டும் என அடிக்கடி கூறி வருகிறேன் என யாழ் ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தவக்காலச் சுற்றுமடலில் தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டை புனித சூசையப்பர் ஆண்டாகத் திருத்தந்தை பிரான்சிஸ் பிரகடனப்படுத்தியமையை நினைவூட்டும் யாழ் ஆயர், புனித சூசையப்பர் தமது வாழ்க்கையில் எளிமை, தவம், இறை அச்சத்துக்குக் கீழ்ப்படிதல் முதலான நற்பண்புகளைக் கொண்டிருந்தார். அத்தகைய அவரது நிலை இறைமகன் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகும் பேறுபெறுவதற்குக் காரணமாக அமைந்தது.

நல்லதைச் செய்யும்போது நாம் நன்மைக்குள் வாழ்கிறோம். அச்சம் நிறைந்த வாழ்வுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

பழமையான சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் விடைகொடுத்து புதிய அர்த்தப்படுத்துதல்களோடு தவக்காலத்தில் நல்ல செப, தப, பகிர்வு முயற்சிகளில் ஈடுபடுவோம் எனத் தனது 2021 ஆம் ஆண்டுக்கான தவக்கா லச் சுற்றுமடலை நிறைவு செய்கிறார்.

# குருத்துவப் பணியில் இம்மனுவல் அடிகளார்

கத்தோலிக்க செய்தி இதழ்

2021ஆம் ஆண்டில் 87ஆவது அகவையையும் குருத்துவப் பணியில் 54 ஆண்டுகளையும் நிறைவு செய்யும்; கலாநிதி எஸ்.ஜே.இம்மனுவல் அடிகளார் ஒரு சிந்தனையாளர், கொள்கை வகுப்பாளர், முற்போக்காளர், இறையியலாளர், விரிவுரையாளர், பேச்சாளர், எழுத்தாளர், தமிழ்ப் பற்றாளர் ஆசிய ஆயர்கள் பேரவையின் இறையியல் ஆலோசகர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர்.

1995ஆம் ஆண்டில் இலங்கையின் வடபகுதியில் இடம்பெற்ற இடப்பெயர்வின்போது யாழ் மண்ணை விட்டு வெளியேறிய எஸ்.ஜே.இம்மனுவல் அடிகளார் 2010ஆம் ஆண்டுமுதல் உலகத் தமிழர் பேரவையின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். தனது 21 ஆண்டுகால (1996 2017) வெளிநாட்டு வாழ்வில் ஐரோப்பாவிலும் லண்டன், பிறாண்ங்பேட், முன்ஸ்ரர் பல்கலைக் கழகங்களில் ஆசிய இறையியலாளராகக் கற்பிக்க அழைக்கப்பட்டார். அப்பொழுது அவர்களுடன் தனது ஆசிய இறையியல் அனுபவங்கள் மற்றும் சிந்தனைகளை ஆங்கிலத்திலும் ஜேர்மன் மொழியிலும் பகிர்ந்து கொண்டு அந்தச் சிந்தனைகளைச் சில சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் இவர் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் அற்ற அவல வாழ்வை சர்வதேச அரங்கில் பகிரங்கமாக அறிவித்து தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் எல்லா நாடுகளுக்கும் குறிப்பாக 26 நகரங்களுக்குச் சென்று பரப்புரைகளையும் மேற்கொண்டார். 2017ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பை ஏற்றுத் தாய்நாடு திரும்பினார்.

இன்றுவரை இவர் ஜேர்மன், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் 12 புத்தகங்களை வெளியிட்டுள்ளார்.

இவர் தமிழ் ஆங்கிலம் இலத்தீன் பிரெஞ்ச் ஜேர்மன் , இத்தாலியன் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தவக்கால சிந்தனை

# நம்பிக்கை என்னும் தூயஆவியின் கனி

'ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிறவர் எவரும் மீட்புப் பெறுவர்' (உரோ.10:13).

நாம் ஒவ்வொருவரும் அருள்வாழ்வில் வாழ அழைக்கப்பட்டுள்ளோம். இன்றைய கொரோனா காலகட்டத்தில் மனிதனைத் தவிர அனைத்து உயிர்களுமே சுதந்திரமாகச் சுற்றித்திரிந்து கொண்டிருக்கின்றன. ஆனால் தூய ஆவியின் துணை கொண்ட நாம் இந்தக் கொடிய நோயைக் கண்டு நம்பிக்கையிழந்து துவண்டுபோய் நிற்கின்றோம். நம்பிக்கையை இலக்கணமாகக் கொண்டு நிறைந்துள்ளது திருவிலியம். நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் எனும் உறுதியே எமது நம்பிக்கை.

மண்ணுலகில் நம்பிக்கை கொண்ட மனிதரையே விண்ணுலகில் இருக்கின்ற நம் தந்தை அவரோடு வாழ அழைக்கின்றார். அன்று இஸ்ரயேல் மக்கள் கொடிய பத்து வாதைகளையும் வெற்றியுடன் கடந்து வந்தமைக்குக் காரணம் தம்மைப் படைத்த கடவுள் மேல் கொண்ட அளவு கடந்த அசையாத நம்பிக்கையே. நம்பினால் தானே நாம் கடவுளின் மாட்சியைக் காண முடியும்.

நம்பிக்கை எனும் தூய ஆவியாரின் கனி இருந்தால் மட்டுமே ஆன்மாக்களின் மீட்பு என்பது உறுதி. ஆண்டவரின் மீது நம்பிக்கை கொண்டிருப்போர் புதிய ஆற்றல் பெறுவர். பல்வேறு விதங்களில் ஆசீர்வதிக்கப்பட்டுள்ள நம்மிடத்தில் ஆண்டவர் நம்பிக்கை எனும் கனியைத் தேடுவார். கண்ணீர், அழுகை, கவலை, துயரம், வெறுப்பு, பகையோடு வாழ்ந்து கொண்டிருக்கும் எம் நம்பிக்கையற்ற வாழ்விலிருந்து பிறருக்கு உதவும் உறவின் பாலங்களாய் நாம் மாறும்போது எமது உடனிருப்பு பிறரை ஊக்கப்படுத்தும் நம்பிக்கையாய் மாறும். வெறுமனே பக்திச் சடங்குகளுக்குள் நம்மைப் புதைத்துவிடும் ஒரு களமாக இந்தத் தவக்காலத்தையும் கடந்து செல்வதை தவிர்த்து உயிர்த் துடிப்புள்ள நம்பிக்கை தரும் வாழ்வை முழுமனித வாழ்வுக் கண்ணோட்டத்தில் செயல்படுத்தும் செயல் வீரர்களாக நாம் மாற வேண்டும். இயேசுவின் மனநிலை, மதிப்பீடுகள், இலக்குகள், அணுகுமுறைகள், செயல்பாடுகள் நம்முடையனவாக மாற வேண்டும்.

எமது தனிப்பட்ட, குடும்ப, குழும, இறைசமூக வாழ்வில் கொரோனா எனும் கொடிய நோயை விரட்ட நம்பிக்கையுடன் இறைவனை வேண்டுவோம். நாம் பெற்றுக் கொண்ட அருள் வாழ்வில் நீடித்து நிலைத்திருப்பதற்குத் தேவையான ஆன்மிகச் செயற்பாடுகளை முன்னெ டுப்போம்.

**யோ.ற.சைலேந்தினி**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 35வது பட்டமளிப்பு விழாவில் **B.B.A (Hons)Acc(spl)** பட்டத்தைப் பெற்றுக்கொண்ட எமது கல்விநிலைய ஆசிரியர்

**திரு.சி.மதீசன்**

அவர்களை மேலும் பல பட்டங்களைப் பெற்று வாழ்வின் உயர் இலட்சியங்களை அடைய இறையாசி வேண்டி பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கின்றோம்.

**வாழ்த்துவோர்: ஆசிரியர்கள், மாணவர்கள், குமரன் கல்வி நிலையம்.**


# எல்லையில் அமைதியைப் பேண இந்தியா – பாகிஸ்தான் தீர்மானம்

இஸ்லாமபாத், பெப். 27

**எல்லையில் அத்துமீறித் தாக்குதலை நிறுத்துதல் உள்ளிட்ட அனைத்து ஒப்பந்தங்களையும் தீவிரமாகக் கடைப்பிடிக்கவும், இருதரப்பு இடையிலான முக்கியப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இந்தியா – பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே ஒப்பந்தம் முடிவாகியுள்ளது. குறிப்பாக எல்லையில் அமைதிக்குக் குந்தகம் விளைவித்தல் மற்றும் வன்முறையைத் தூண்டுதல் ஆகிய நடவடிக்கைகளை அடையாளம் காணவும் இருதரப்பும் முடிவு செய்துள்ளன.**



இந்தியா மற்றும் பாகிஸ்தானின் ராணுவ செயல் இயக்குநர்கள் மட்டத்தில் நடந்த பேச்சின் அடிப்படையிலேயே இந்த ஒப்பந்தம் முடிவாகியுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் பதன்கோட் விமானப்படைத் தளத்தில் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவு மிகவும் மோசமடைந்தது. அதைத்தொடர்ந்து காஷ்மீரின் ஊரி ராணுவ முகாம் மீதும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து, புல்வாமா தாக்குதலில் 40 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

இவற்றுக்குப் பதிலடியாக இந்திய ராணுவம் ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத முகாம்களை அழித்தது. கடந்த 2019ஆம் ஆண்டில் ஜம்மு காஷ்மீருக்கான சிறப்பு உரிமையை மத்திய அரசு நீக்கியபின் பாகிஸ்தானுடனான இந்திய உறவு மேலும் மோசமடைந்தது. இந்த சூழலில் இரு தரப்பு நாடுகளுக்கும் இடையே இந்த ஒப்பந்தம் முடிவாகியுள்ளது. இந்த ஒப்பந்தம் அனைத்தும் நேற்று இரவு முதல் நடைமுறைக்குவரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாகிஸ்தானும், இந்தியாவும் கூட்டாக வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இரு தரப்பு நாடுகளும் எல்லைக் கட்டுப்பாட்டுப்பகுதி உள்ளிட்ட மற்ற பகுதிகளில் சுதந்திரமான, வெளிப்படையான, நல்ல சூழல் நிலவ வேண்டும் எனும் நோக்கில் ஆய்வு செய்தோம். எல்லையில் பரஸ்பர அமைதியும், இருதரப்புக்கும் நன்மை ஏற்படும் நோக்கில், இரு தரப்பு ராணுவ செயல் இயக்குநர்களும் சேர்ந்து, வன்முறைக்கு வித்திடும், அமைதியைக் குலைக்கும் முக்கிய பிரச்சினைகள் மற்றும் கவலைக்குரிய விடயங்கள் ஆகியவற்றைத் ...ர்க்க முடிவு செய்யப்பட்டுள்ள...

இரு தரப்புகளும் அனை... ஒப்பந்தங்களையும், புரிந்... ர்வுகளையும், போர் நிறுத்... ப்பந்தங்களையும் தீவிரமாக... டைப்பிடிக்க முடிவு செய்ய... டுள்ளது. இந்த ஒப்பந்தம் ... ஆம் திகதி நள்ளிரவு முதல் ... டைமுறைக்கு வரும். இரு தர... நாடுகளுக்கும் இடையே ஏ... வே நடைமுறையில் இருக்கு... ாட் லைன் தகவல் தொடர்... ும் கொடி அணிவகுப்பு கூட்... ஆகியவற்றை அசம்பாவி... ன சூழல்களையும், தவறா... ரித லையும் தீர்க்க பயன்... த்திக் கொள்ள வேண்டும்' என... தெரிவிக்கப்பட்டுள்ளது.

-இ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




25.02.2021 அன்று நடைபெற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழக 35வது பட்டமளிப்பு விழாவில் **சித்த மருத்துவ சத்திர சிகிச்சைமாணி (B.S.M.S)** பட்டம் பெற்றமைக்காக கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த

**செல்வி மோகன் பிருந்தா**

அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு மேன்மேலும் பட்டங்களைப் பெற்று வாழ்க்கையில் சிறப்படைய இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**அக்கா, அத்தான், சந்தோஷ்.**




மியான்மரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக அங்கு மக்கள் தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வர்த்தக நகரான யாங்கூனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போராட்டமொன்றில் கலந்துகொண்ட யுவதியொருவரின் ஒளிப்படமே இது. (ம)

# கார்ட்டூன்களுக்கும் ஹிஜாப் கட்டாயம்

தெஹ்ரோன், பெப். 27



கார்ட்டூனில் வரும் பெண் கதாபாத்திரங்கள் ஹிஜாப் அணிய வேண்டும் என்று ஈரான் மூத்த மதத்தலைவர் ... த்துல்லா அலி காமினி உ... ரவிட்டுள்ளார். அவரின் மத ரீதியான ஆணைக்குக் கடு... எதிர்ப்பு எழுந்துள்ளது.

அனிமேஷன்க... கார்ட்டூன்களில் பெ... கள் ஹிஜாப் அணியா... தால் ஏற்படும் விளை... வத் தடுப்பதற்காக அ... வரும் பெண் கதாப... ரங்கள் ஹிஜாப் அ... ய வேண்டும் என்று ... னது ஆணையில் அ... துல்லா அலி காமின... றிப்பிட்டுள்ளார்.

ஈரான் சமூகச் ... யற்பாட்டாளர் ஒரு... இது தொடர்பில் கூறு... பாது, 'இது நிச்சயம் ... மத் தன்மை கொண்டது. ஈரானின் மூத்த மதத் தலைவர், அனிமேஷன்களில் வரும் பெண் கதாபாத்திரங்களைக்கூட ஹிஜாப் அணியச் சொல்கிறார். இவர்கள் அனிமேஷன்களில் வரும் பெண் தேனீக்களைக் கூட ஹிஜாப் அணியச் சொல்வார்கள். இவர்கள்தான் ஈரானில் அதிகாரத்தில் உள்ளனர்' என்று தெரிவித்துள்ளார்.

பெண்களுக்கு எதிரான பல்வேறு அடக்குமுறைகளை ஈரான் அரசு கடைப்பிடிக்கிறது. ...ரின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக அ... மகளிர் அமைப்புகள் தொடர்ந்து குரல் ... வருகின்றன.


## வேலணை பல நோக்கு கூட்டுறவு சங்கம்

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கான 31.12.2020ம் திகதியுடன் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்க தகுதியுடைய வாக்காளர்களின் பெயர் விபரம் அடங்கிய வாக்காளர் பட்டியல் இயங்குகின்ற கிளைகளிலும் இயங்காத கிளைகளின் பட்டியல் சங்க தலைமைக் காரியாலயத்திலும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடங்களின் விபரம்.

| கிளை இலக்கம் | காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடம் |
|---|---|
| கிளை இல 01 மண்டைதீவு | தலைமைக் காரியாலயம் |
| கிளை இல02 மண்டைதீவு | தலைமைக் காரியாலயம் |
| கிளை இல 03 அல்லைப்பிட்டி | தலைமைக் காரியாலயம் |
| கிளை இல 04 மண்கும்பான் | தலைமைக் காரியாலயம் |
| கிளை இல05 ஆலம்புலம் | தலைமைக் காரியாலயம் |
| கிளை இல 06 தேவிகோட்டம் | தலைமைக் காரியாலயம் |
| கிளை இல 07 துறையூர் | கிளை நிலையம் |
| கிளை இல 08 சந்திரா | கிளை நிலையம் |
| கிளை இல 09 சிற்பனை | தலைமைக் காரியாலயம் |
| கிளை இல 10 வங்களாவடி | கிளை நிலையம் |
| கிளை இல 11 வேலணை மத்தி | கிளை நிலையம் |
| கிளை இல 12 சோளாவத்தை | தலைமைக் காரியாலயம் |
| கிளை இல 13 பள்ளம்புலம் | தலைமைக் காரியாலயம் |
| கிளை இல 14 சரவணை | தலைமைக் காரியாலயம் |
| கிளை இல 15 கேணிக்கரை | தலைமைக் காரியாலயம் |
| கிளை இல 16 அம்பிகைநகர் | கிளை நிலையம் |

இப் பட்டியல் 27.02.2021ம் திகதியில் இருந்து 15.03.2021ம் திகதி வரை மேற்குறிப்பிட்ட இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் என்பதுடன் மேற்படி வாக்காளர் பட்டியல் தொடர்பான திருத்தங்கள் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் சங்கச் செயலாளருக்கு எழுத்து மூலம் 15.03.2021ம் திகதிக்கு முன்னர் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செயலாளர்.
வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
தொ. இல. 0212211522


# பைடனின் முதல் தாக்குதல் சிரிய தீவிரவாத முகாமில்!


வொஷிங்டன், பெப். 27

அமெரிக்க அதிபராகப் பைடன் பொறுப்பேற்ற பின்னர் அவரின் முதலாவது தாக்குதல் சிரியாவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிரியாவில் அமைந்துள்ள ஈரான் ஆதரவுத் தீவிரவாதிகளின் தளங்கள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஈரானுடனான வெளிவிவகாரக் கொள்கைளில் பைடன் மாற்றங்கள் எதையும் செய்யாமல் ட்ரம்ப் காலத்துக் கொள்கையை நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# முஸ்லிம்களின் உரிமையில் மீண்டும் கைவைக்கிறது அரசு

## முகத்தை மூடும் ஆடைகளுக்குத் தடை?



கொழும்பு,பெப்.27

**பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக பொது இடங்களில் முகத்தை மறைக்கும் வகையில் (புர்காக்கள் உள்ளிட்ட பிற முகமூடிகள்) ஆடைகள் அணிவதைத் தடை செய்வது தொடர்பான யோசனை, அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

அதேவேளை கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துக்குள் முஸ்லிம் விவாகரத்துச் சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவையில் ஒரு யோசனை முன்வைக்கப்பட்டது. இது திருமணத்துக்கான வயது குறைந்தபட்சம் 18 ஆக இருக்க வேண்டும் என்று முன்மொழியப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை அவர்களின் மரபுக்கு மாறாக தகனம் செய்யும் நடவடிக்கைகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பல்வேறு அழுத்தங்களைத் தொடர்ந்து அவ்வாறு உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்ய முடியும் என்று அரசு வர்த்தமானி வெளியிட்டுள்ளது. (க,-இ)

# தற்போதைய அரசை குறைகூற விடேன்

முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.27

மிகக் குறுகிய காலத்தில் மக்களை ஏமாற்றிய ஒரே அரசு என்று தற்போதைய அரசை எவரும் கூறுவதற்கு இடமளிக்க முடியாது என்று நாரஹென்பிட அபயாராம விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

நாரஹென்பிட அபயாராமய விகாரையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த அரசைக் கொண்டு வருவதற்கு நாங்கள் பெரும் முயற்சி எடுத்தோம். எனவே குறை கூறும் இதுபோன்ற ஒரு வார்த்தையை யாரிடமிருந்தும் கேட்கத் தயாராக இல்லை. நாட்டின் சிறந்த அரசாக, தற்போதைய அரசை மாற்ற விரும்புகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# ஆனந்ததேரர் எழுதிய நூல் ஜனாதிபதியிடம் கையளிப்பு



கொழும்பு,பெப்.27

மேல் மாகாண தலைமை சங்க நாயக்க தேரர், நாரஹேன்பிட அபயராமாதிபதி சங்கைக்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர் எழுதிய 'ஹெல வெதகமே யடகியாவ' நூலின் முதல் பிரதி, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

இலங்கையின் பண்டைய சுதேச மருத்துவம் மற்றும் அதன் பொற்காலம் மற்றும் பெறுமானங்கள் பற்றிய முக்கியமான தகவல்கள் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. (க-இ)

# பௌத்தர்களின் சட்டங்களில் கைவைப்பதற்கு இடமேயில்லை

## நீதி அமைச்சர் அலி சப்ரி திட்டவட்டம்

கொழும்பு,பெப்.27

2 ஆயிரத்து 500 ஆண்டுகள் பழமையான பௌத்தர்களின் "தேவாலகம்" சட்டத்தை இரத்துச் செய்வதற்கோ அல்லது அதில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கோ எந்த எதிர்பார்ப்பும் கிடையாது என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பௌத்த விகாரைகள் மற்றும் கோயில்கள் சட்டம், தனி நபர் சட்டம் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் தெரிவித்தார் என செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரதன தேரர் நாடாளுமன்றத்தில் 27/2 பிரேரணையில் உரையாற்றும் போது, அதற்கு நான் பதிலளித்தேன். அதனை அடிப்படையாக வைத்துக் கொண்டு சமூகத்தில் தவறான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

அத்துரலியே ரதன தேரர் முன்வைத்த கேள்விக்கமைய 16 ஆவது சரத்து நீக்கப்பட்டால், அதன் கீழ் வரும் அனைத்துச் சட்டங்களும் வீழ்ச்சியடைவற்கு வாய்ப்புக்கள் உள்ளன என்று நான் பதிலளித்தேன். அதைவிட வேறு எந்தக் கருத்தையும் நான் அங்கு முன்வைக்கவில்லை.

இரண்டாயிரத்து 500 வருட வரலாற்றைக் கொண்ட பௌத்த கலாசாரப் பண்புகள் நடைமுறையிலுள்ள இந்த நாட்டின், சிங்கள பௌத்த மக்களின் பாரம்பரிய உரிமைகளுக்கு எதிராக சட்டம் கொண்டுவருவதற்கு எவ்வகையிலும் முடியாது.

தற்போதைய அரசுக்கு அவ்வாறு செயற்படுவதற்கான எந்த அவசியமும் கிடையாது, என்றார். (க-இ)


## மரண அறிவித்தல்

உதயம் 14 . 08 . 1963



அஸ்தமனம் 23 . 02 . 2021

### குருநாதன் பிரபாகரன் (பிரபா)

(யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவன் - 1981 A/L, வணிகமானி சிறப்பு 1982-86, யாழ் பல்கலைக்கழகம்)

இல.125, முதலாம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், அரியாலையை பூர்வீகமாகவும், TRING,UK ஐ வசிப்பிடமாகவும் கொண்ட குருநாதன் பிரபாகரன் 23.02.2021 அன்று UK இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் விஜிதா (UK) வின் பாசமிகு கணவரும், மிதுஷன், ரவீனா (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் குருநாதன் (சட்டத்தரணி) சற்குனேஸ்வரி குருநாதன் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பானுமதி துரைச்சாமி தம்பதியரின் அன்பு மருமகனும், கருணாகரன் (UK), கிருபாகரன் (UK), Dr.திருமகன் (பல் மருத்துவர், யாழ் போதனா வைத்திய சாலை), உருத்திராகரன் (தேசிய சேமிப்பு வங்கி-திருநெல்வேலி), நாமகள் (பட்டதாரி பயிலுனர் - நல்லூர் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு சகோதரரும், Dr.ரவிச் சந்திரன் (சத்திர சிகிச்சை நிபுணர்-UK), Dr.ஹேமநளினி அசோகன் (கொழும்பு), Dr.யசோதா துரைச்சாமி (UK), Dr.அனுஷா சுபாஷன் (கொழும்பு), சரத்சந்திரன் (UK), வனிதை கருணாகரன் (UK), பிரீதிகா உருத்திராகரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், Dr.வசந்தி ரவிச்சந்திரன் (மகப்பேற்றியல் நிபுணர்-UK), Dr.அசோகன் (மகப்பேற்றியல் நிபுணர் - கொழும்பு) Dr.சுபாஷன் (கொழும்பு), விஜிதா சரத்சந்திரன் (UK) ஆகியோரின் அன்புச் சகலனும், தர்ஷன் (UK), கீர்த்தனா (UK) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், நிவேதனின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.03.2021 மாலை 2.30 மணியளவில் (UK நேரம்) UK இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

13/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர். 021 222 6703


# ஆளும் கட்சியினர் - பிக்குகள் அபயராமவில் விசேட பேச்சு

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் 10 கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிக்குமார் சிலர் இணைந்து கொழும்பு நாராஹேன்பிட்டியில் உள்ள அபயராம விகாரையில் பேச்சு நடத்தியுள்ளனர்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்ததாவது,

எதிர்காலப் பயணம் குறித்து பேச்சு நடத்தியுள்ளோம். அதாவது, மக்களின் துன்ப துயரங்கள் குறித்துக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இந்த விடயங்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் பேச்சு நடத்தியுள்ளோம். நிர்வாகம் செய்ய முடியாத திறமையற்ற அதிகாரிகளை அரசாங்கம் நியமித்துள்ளது. சுகாதார அமைச்சின் நிர்வாகம் சீர்குலைந்துள்ளது.

இதேவேளை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, காடுகள் அழிக்கப்படுவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. காடு அழிப்பைத் தடுக்கத் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தையும் பலர் சுட்டிக்காட்டினர். சில அதிகாரிகள் சம்பந்தமாக பிரச்சினைகள் எழுந்துள்ளன. அவற்றைத் திருத்திக்கொள்ள வேண்டும் -என்றார். (ற-இ)

# கேள்வி அறிவித்தல் - 2021
# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட, கீழ்க் குறிப்பிடப்படும் மாட்டு இறைச்சிக்கடைகள் **2021.03.15** ஆம் திகதி தொடக்கம் **2021.12.31** ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி:. 09.03.2021 பி.ப2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி: **10.03.2021 பி.ப2.00மணிவரை**
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி: **10.03.2021 பி.ப2.30மணி**
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம்: வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், மானிப்பாய்.

01. கேள்விப்பத்திரங்கள் 02பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதிஉட்பட 02 பிரதிகளையும் ***"தவிசாளர், வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை மானிப்பாய்"*** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கெனத் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் போடப்படுதல் வேண்டும்
02. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற் படப்பிரதியையும் கொண்டு வருவதுடன் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
04. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்தகேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
05 உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.
06. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தலுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
07. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிதிநிதியோ சமூகமளிக்கலாம்.
08. ஆனைக்கோட்டைச் சந்தி மாட்டிறைச்சிக்கடையை குத்தகைக்கு எடுப்பவர்கள் நடாத்துவதற்குரிய இடத்தினைத் தாங்களே தெரிவு செய்தல் வேண்டும்.
09. மாதவாடகையானது விலைமதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
10. அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் வரியினை செலுத்துதல் வேண்டும்.
11. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் **1/3**பகுதியை **15.03.2021** ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளவேண்டும்.
12. கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்வதுடன் கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
13. நாட்டில் ஏற்படக் கூடிய அசாதாரண சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு இதில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம்.

| இல | மாட்டு இறைச்சிக்கடைகள் விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப்பத் திரப் பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| **மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | | |
| 01 | மானிப்பாய் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை (புதியகட்டடத் தொகுதி) | 1,000.00 | 10,000.00 | **935,200.00** | **600.00** |
| **மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | | |
| 01 | நவாலிபிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | **148,900.00** | **400.00** |
| 02 | ஆனைக்கோட்டைசந்தி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | **415,625.00** | |
| **பண்டத்தரிப்புபட்டின உப அலுவலகம்** | | | | | |
| 01 | பண்டத்தரிப்புப் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 9,000.00 | **1,311,000.00** | **2,250.00** |
| **பண்டத்தரிப்புகிராம உப அலுவலகம்** | | | | | |
| 01 | மாகியப்பிட்டிப் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1,500.00 | **84,700.0** | **800.00** |
| 02 | இளவாலைப் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,500.00 | **419,700.00** | |
| 03 | மாதகல் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 3,000.00 | **194,200.00** | **750.00** |

அ.ஜெபநேசன்,
தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை,
மானிப்பாய்

2021.02.27

## 31ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



பிறப்பு 23 . 08 . 1946

இறப்பு 23 . 01 . 2021

எமது குடும்பத் தலைவி
**அமரர்**
## பாலேந்திரகுமார் தங்கராணி

கடந்த 23.01.2021 சனிக்கிழமை ஆண்டவருக்குள் நித்திரையடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் பாலேந்திரகுமார் தங்கராணி அவர்களின் 31 வது நன்றி நவிலும் வழிபாடும், ஆராதனையும் 27.02.2021 இன்று அன்னாரின் இல்லத்தில் மதியம் 12.00 மணி யளவில் நடைபெறும்.

தவ இல்லம்
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை

குடும்பத்தினர்.

உ
குருமயம்

## ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம் கைதடி

**இடம் : ஆச்சிரமம்**
**காலம்: 28.02.2021 ஞாயிறு பி.ப 2.00**

**நிகழ்வு - 01**
**ஸ்ரீ சச்சிதானந்த நூல் நிலைய திறப்பு விழா**
**தலைமை**
**தலைவர் திரு. இ.குழந்தைவடிவேலு J.P**
(தலைவர் ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம் அறக்கொடை நிலையம்)

**நிகழ்வு - 02**
**தரம் 5 புலமைப்பரிசில் கௌரவிப்பு நிகழ்வு**
(அமரர். அ.சிற்றம்பலம் ஞாபகார்த்தமாக நடைபெறுகின்றது)
**தலைமை**
**திருமதி சி.கிருஸ்ணமூர்த்தி M.A**
(கல்விப் பொறுப்பாளர், ஸ்ரீ சச்சிதானந்த அறக்கொடை நிலையம்)

**நிகழ்வு - 03**
**ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் வரலாற்று நூல் வெளியீடு**
**தலைமை**
**திரு.மு.பத்மரூபன் B.A**
(செயலாளர் ஸ்ரீ சச்சிதானந்த அறக்கொடை நிலையம்)

**நிகழ்வு - 04**
**மாணவர்களுக்கான அறக்கொடை நிதி வழங்கல்**
**தலைமை**
**திரு.சி.மதீசன் B.B.A**
(பொருளாளர், ஸ்ரீ சச்சிதானந்த அறக்கொடை நிலையம்)

**திருமுன்னிலை**
**தவத்திரு.வேலன் சுவாமிகள்**
(சிவகுரு ஆதீனம் நல்லூர்)

**விருந்தினர்கள்**
**கல்விக் காருண்யன் லயன் E.S.P நாகரத்தினம்** (P.M.J.F)
(E.S.P.N அன்கோ)
**ஆன்மீக சிந்தனையாளர் லயன் கு.கங்கைவேணியன் JP**
(வேணி களஞ்சியம்)
**சமூக ஆர்வலர் திரு.பொ.கிருஸ்ணானந்தன்**
(பவானி ஸ்ரோர்ஸ்)
**சமய ஆர்வலர் திரு.அ.லோகநாதன்**
(விரிவுரையாளர் தேசிய கல்வியியற் கல்லூரி யாழ்ப்பாணம்)

**வரலாற்று நூல் முதற்பிரதி பெறுபவர்**
**திரு.க.சயந்தன்** (கதிர்வேலன் இரும்பகம், கைதடி)

**வரலாற்று நூல் விசேடபிரதி பெறுபவர்**
**திரு.சி.சிவகுமார்** (ஆரியபவான் உணவகம், கைதடி)

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்***

**ஆச்சிரமம் அதன் உப அமைப்புக்களும்**

## Sir Pon Ramanathan Memorial Lecture 2021

titled

**"யாழ்ப்பாணக் கோட்டையின் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகள் - ஓர் புதிய பார்வை "**

*By*

Professor P. Pushparatnam,
Retired Senior Professor in History
University of Jaffna.

on

Monday 1st 2021 at 4.00p.m

at

Kailasapathy Auditorium
University of Jaffna

All are cordially invited.
Kindly follow the precautionary measures for COVID 19.

Registrar
University of Jaffna,
Sri Lanka.

## Lady Leelawathy Memorial Lecture 2021

titled

"Women in Academia: Special Reference to Sri Lankan State Universities"

by

Prof.(Ms) Vasanthy Arasaratnam,
Senior Professor of Biochemistry and Member of University
Grants Commision,
Department of Biochemistry,
Faculty of Medicine,
University of Jaffna.

on

Monday 1st March 2021 at 3.00 p.m

at

Kailasapathy Auditorium
University of Jaffna

All are cordially invited.
Kindly follow the precautionary measures for COVID 19.

Registrar
University of Jaffna,
Sri Lanka.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10
.
05
.
1935



மறைவு
09
.
03
.
2020

### அமரர் அம்பலவி இராசையா

**(வேல் முருகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)**

*விதியென ஒன்று உண்டென அறிந்தோம் - அப்பா*
*இருந்தும் மனம் ஏற்குதில்லை அப்பா*
*நீங்கள் இல்லா மனை*
*பொலிவிழந்து போனதுவோ!*
*நிஜமாக நீங்கள் மறைந்து*
*ஓராண்டு ஆனதோ!*

கடந்த 09.03.2020 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் அம்பலவி இராசையா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் கிரியைகள் 27.02.2021 சனிக்கிழமை பகல் 11.00 மணியளவில் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வு அன்னாருடைய இல்லத்தில் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேகட்டுக்கொள்கின்றோம்.

**பருத்தித்துறை வீதி,**
**நீர்வேலி வடக்கு, நீர்வேலி.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
13
-
04
-
1943



மறைவு
25
-
02
-
2021

### குமாரசாமி ஆனந்தநடராசா

(Jafferjee Brother இன் ஓய்வுபெற்ற ஊழியர் )

கொக்குவிலை பிறப்பிடமாகவும் கொழும்பு மற்றும் உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி ஆனந்தநடராசா (Jafferjee Brother இன் ஓய்வுபெற்ற ஊழியர் ) 25.02.2021 ல் யாழ்ப்பாணத்தில் காலமானார்

அன்னார் காலம் சென்ற குமாரசாமி (முன்னாள் அதிபர்-கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) சிவஞானம்மா தம்பதிகளின் மூத்தபுதல்வனும் காலஞ்சென்ற ஆனந்த சுந்தரம் கனகம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற ஆனந்தலட்சுமி (ஓய்வு-பெற்ற ஆசிரியை) யின் கணவரும் கிருசாந்தி சயந்தன் ஆகியோரின் தகப்பனாரும் துளசியின் மாமனாரும் காவியா, ஆதவன் ஆகியோரின் பேரனும், சரோஜினிதேவி, காலம்சென்ற சிவஞானதேவி மற்றும் மகாதேவி, பத்மாதேவி, ஆகியோரின் சகோதரனும் காலம் சென்ற சிதம்பரநாதன் மற்றும் துரைராஜா, ஸ்ரீதாஸ், காலம்சென்றவர்களான சோதிநாதன், கதிரவேற்பிள்ளை ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.02.2021) சனிக்கிழமை 69, பிரதான வீதி, யாழ்ப்பாணம் துதி அந்திய காலசேவை மண்டபத்தில் பார்வைக்காக வைக்கப்படும்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28 02 2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் 69, பிரதான வீதி, யாழ்ப்பாணம் துதி அந்திய கால சேவை மண்டபத்தில் நடைபெற்று கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

**தகவல்:**
**சயந்தன் : +447878255914**
**ஞானகணேசன் :+ 94777376450**

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

TVS Wego மோட்டார் சைக்கிள் இரண்டு விற்பனைக்கு உண்டு. BDW/BCU

077 898 9691 (யாழ்ப்பாணம்)

**நல்லூர்க்கந்தன் திருமணசேவை**

அரசபணி, தனியார் நிறுவனம், உள்நாடு, வெளிநாடு எல்லாவித மணமக்களுக்கும் ஏற்ற வரன்கள் எம்மிடம் உண்டு.

தொடர்பு:0779733183 வி.ஜெயந்தி

**தனிப்பட்ட வகுப்புக்கள்**

**(தரம் 09-GCE [O/L])**

மேற்படி வகுப்புக்களுக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் தனிப்பட்டரீதியாகவோ, குழுக்களாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: 075 049 7577

**பெயர் மாற்றம்**

இரத்தினபுரம் கிளிநொச்சியில் வசிக்கும் சின்னையா பழனி ஆகிய நான் எனது பெயரை சின்னையா பார்த்தீபன் என மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் சின்னையா பார்த்தீபன் என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்

-சின்னையா பார்த்தீபன்

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

குழந்தையைப் பராமரிப்பதற்கும், வீட்டு வேலை செய்வதற்கும் பணிப்பெண் தேவை.

T.P:077 308 3007

**கொள்வனவு**

மில் தானிய வகைகள் கொள்வனவு செய்யப்படும்.

104, மாப்பியன் மில் சுதுமலை மானிப்பாய்.

தொடர்பு: 0777722215

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்திலுள்ள வாகன சுத்தரிப்பு நிலையத்திற்கு (Service Station) வேலைக்கு ஆட்கள் தேவை.

தொடர்பு: 071 937 6256

**நாஹா மருத்துவ நிலையம்**

கை, கால் அதிக விறைப்பு, எலும்பு பாதிப்பு, மூட்டுவாதம், அல்சர், மூல வருத்தம், தீராத ஆஸ்மா, எக்ஸிமா, மாறாத புண்கள் சிறப்பு மருந்தியல்

வங்கி முன்லேன், சாந்தாவத்தை வயிரவர் கோவிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

தொடர்பு: 077 321 2740


## அரசாங்க அறிவித்தல்

## பகிரங்க ஏலவிற்பனை

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

மாவட்டச் செயலகம் மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வளிபதனாக்கிகள், கணினிகள், பிரிண்டர்கள், ரயர்கள், மின்சார உபகரணங்கள், கட்டடங்களிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் என்பன பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏலவிற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் வேலை நாளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 1.00 மணி வரை பொருட்களைப் பார்வையிடலாம். ஏல விற்பனையில் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப் பணத்தினையும் ஏல விற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டினைப் (பொது 172) பெற்று அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடங்களில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

| இல | அலுவலகம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | பிரதேச செயலகம் - பருத்தித்துறை | 08.03.2021 திங்கட்கிழமை | மு.ப. 09.30 | பி.செ.பருத்தித்துறை |
| 02 | பிரதேச செயலகம் - கரவெட்டி | 08.03.2021 திங்கட்கிழமை | மு.ப. 11.00 | பி.செ.கரவெட்டி |
| 03 | பிரதேச செயலகம் - தெல்லிப்பளை | 09.03.2021 செவ்வாய்க்கிழமை | மு.ப. 09.30 | பி.செ.தெல்லிப்பளை |
| 04 | பிரதேச செயலகம் - உடுவில் | 09.03.2021 செவ்வாய்க்கிழமை | மு.ப. 10.30 | பி.செ.உடுவில் |
| 05 | பிரதேச செயலகம் - காரைநகர் | 10.03.2021 புதன்கிழமை | மு.ப. 09.30 | பி.செ.காரைநகர் |
| 06 | பிரதேச செயலகம் - சங்கானை | 10.03.2021 புதன்கிழமை | மு.ப. 11.00 | பி.செ.சங்கானை |
| 07 | பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய் | 10.03.2021 புதன்கிழமை | பி.ப. 01.30 | பி.செ.சண்டிலிப்பாய் |
| 08 | பிரதேச செயலகம் - சாவகச்சேரி | 12.03.2021 வெள்ளிக்கிழமை | மு.ப. 09.30 | பி.செ.சாவகச்சேரி |
| 09 | பிரதேச செயலகம் - கோப்பாய் | 12.03.2021 வெள்ளிக்கிழமை | மு.ப. 11.00 | பி.செ.கோப்பாய் |
| 10 | பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம் | 15.03.2021 திங்கட்கிழமை | மு.ப. 09.30 | பழைய யாழ்ப்பாணப் பிரதேச செயலக கட்டடம் (சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக) |
| 11 | பிரதேச செயலகம் - நல்லூர் | 15.03.2021 திங்கட்கிழமை | மு.ப. 11.00 | பி.செ.நல்லூர் |
| 12 | பிரதேச செயலகம் - நெடுந்தீவு | 16.03.2021 செவ்வாய்க்கிழமை | மு.ப. 09.30 | பி.செ.நெடுந்தீவு |
| 13 | தகவல் தொழிநுட்ப பூங்கா - யாழ்ப்பாணம் | 16.03.2021 செவ்வாய்க்கிழமை | மு.ப. 10.00 | தகவல் தொழிநுட்ப பூங்கா, யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்க கட்டடம் |
| 14 | பிரதேச செயலகம் - மருதங்கேணி | 17.03.2021 புதன்கிழமை | மு.ப. 11.00 | பி.செ.மருதங்கேணி |
| 15 | பிரதேச செயலகம் - ஊர்காவற்றுறை | 18.03.2021 வியாழக்கிழமை | மு.ப. 10.00 | பி.செ.ஊர்காவற்றுறை |
| 16 | பிரதேச செயலகம் - வேலணை | 18.03.2021 வியாழக்கிழமை | பி.ப. 02.00 | பி.செ.வேலணை |
| 17 | மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம் | 19.03.2021 வெள்ளிக்கிழமை | மு.ப. 09.30 | நாவற்குழி அரச களஞ்சியசாலை |

க.மகேசன்
அரசாங்க அதிபர்
யாழ் மாவட்டம்.


**NVQ** **DMI COMPUTER EDUCATION**

TVEC Reg.No.P25/0056

தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் NVQ தகைமை

**ICT - NVQ LEVEL- 5**

**Diploma in Information Technology** [ Full Time - 1 Year ]

NVQ 5 & 6 குறைந்த கற்கைநெறி கட்டணத்தில் ICT துறையில் குறுகிய காலத்தில் அரச பல்கலைக்கழகபட்டதாரி ஆகும் சந்தர்ப்பம்.

பதிவுகளை மார்ச் 5ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் வடமாகாணத்தில் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்

புதிய பிரிவுகள் ஆரம்பம் 1/3/2021 (Mon) 9 am

Call now 0777173517

**ICT - NVQ LEVEL - 4** [ Full Time - 6 Months ] | **CAA - NVQ LEVEL - 3** [ Full Time - 3 Months , Part Time - 6 Months ]

**DMI COMPUTER EDUCATION**

No113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் (சயன்ஸ் ஹோல் அருகாமை) 021 222 4403

M.M.V. வீதி, நெல்லியடி 021 226 2470

A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி 021 228 5655

0777240707


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முகாமையாளரும் யாழ் மறைமாவட்ட ஆயருமாகிய

**பேரருட்திரு. கலாநிதி யஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம்**

அவர்களின் பாசமிகு சகோதரனும், எமது கல்லூரியின் பழைய மாணவனுமாகிய

**வைத்திய கலாநிதி. நவநீலன் கிறிஸ்ரி ஞானப்பிரகாசம்**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மன வேதனை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கும், எமது கல்லூரி முகாமையாளராகிய யாழ் ஆயருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாறுதல் பெற பிரார்த்திக்கின்றோம்.

பத்திரிசிய குடும்பம்
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 05 . 11 . 1941



மறைவு 28 . 01 . 2021

### அமரர் சேதுபதி கைலாசபதி

(ஓய்வுபெற்ற கட்டட பொறியியலாளர், இலங்கை போக்குவரத்து சபை, கோண்டாவில்)

*இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்*
*பெருமை பிறங்கிற்று உலகு* (குறள்-23)

28.01.2021 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் உதவி புரிந்த அனைவரிற்கும், அன்னாரின் மரணச் செய்தியறிந்து எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவி செய்து, ஆறுதல் கூறிய அனைத்து அன்புள்ளங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 25.02.2021 (வியாழக்கிழமை) அன்று கீரிமலை புண்ணிய தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (27.02.2021) சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.259 A, நாவலர் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7183

குடும்பத்தினர்.

# குர் ஆனின் போதனைகள் புற்றுநோயைப் போன்றவை

## ஞானசாரரின் புதிய கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப்.27
குர்ஆனின் போதனைகள் புற்றுநோயைப் போன்றவை என்று பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
நாங்கள் குர்ஆனின் போதனைகளுக்கு எதிராகப் போரிட்டோம். இந்தப் போதனைகள் நாடுகளுக்கு புற்றுநோய் போன்றவை. சில நாடுகள் இந்தப் போதனைகளைத் தடை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன.
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் படி எங்களைத் தடை செய்யுங்கள். அதேவேளை



ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்துங்கள்.
அதேவேளை பொதுபலசேனாவை ஏன் தடை செய்கின்றீர்கள் என்பதற்கான காரணத்தையும் வெளியிடவேண்டும். நாங்கள் எந்தக் குற்றங்களிலும் ஈடுபடவில்லை. நாங்கள் எங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினோம் - என்றார். (க-இ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்....

### நாய்க்கூண்டு....

கூண்டை வாகனம் ஒன்றில் ஏற்றிய போது, அங்கு மின்குமிழ் பொருத்தப்பட்டிருந்த மின் வயர், கூண்டின் கூரையுடன் தொடுகையுற்று மின் பாய்ந்தது என்று கூறப்படுகின்றது.
உயிரிழந்த இளைஞரின் உடல் கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
அதேவேளை, அந்த வீட்டின் மின் இணைப்பு மின்சார சபையால் ஒரு வாரத்துக்கு முன்னர் துண்டிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. சட்டவிரோத மின் இணைப்பாலேயே இந்தச் சம்பவம் நடந்திருக்கலாம் என்று உயிரிழந்தவர்களின் உறவினர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (எ-10,113,12)

### அநுர....

கச் சிகிச்சை பெற்றுவந்தநிலையில் நேற்று அவர் உயிரிந்தார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.
இவர் வீரகுல, வெயாங்கொட, கிளிநொச்சி, வெலிக்கட, ராகம மற்றும் மிரிஹான ஆகிய பொலிஸ் நிலையங்களில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி, 2008ஆம் ஆண்டு சி.சி.டி. எனப்படும் கொழும்பு குற்றவியல் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபராக 2011ஆம் ஆண்டு தரமுயர்த்தப்பட்டார்.
இதேவேளை, வசீம் தாஜுதீன் கொலை வழக்கில் சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டில் இவர், கடந்த 2016ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டிருந்தார். வெள்ளை வான் கடத்தல்கள் பலவற்றோடு அநுர சேனநாயக்கவுக்குத் தொடர்பு இருந்தது என்று மனித உரிமைகள் அமைப்புக்க்ள் பலவும் குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28
06
1961



மறைவு
27
02
2012

திதி: 17.02.2021
அமரர் இராசையா ஜெயகோபால்
(தொழிநுட்ப உத்தியோகத்தர்- யாழ் பல்கலைக்கழக பௌதீகவியற்துறை விஞ்ஞானபீடம்)

பண்பின் வழிகாட்டியாய்
வாழ்வின் பாடமாய்
எம்மைவிட்டுப் பிரிந்து
9 ஆண்டுகள் ஆனாலும்
எம் நெஞ்சத்தில் உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாய் நிறைந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்

தொல்புரம் மத்தி.
சுழிபுரம். குடும்பத்தினர்.

## 35வது பொதுப்பட்டமளிப்பு வைபவம்
## வேந்தரின் பேருரைக்கான அழைப்பு

தலைப்பு: “பழங்காலப் பதிவுகளும் நிகழ்காலப் பார்வைகளும் - மகாவம்சமும் வரலாற்று நூல்களும்”
**“Past and Present - The Mahavamsa and Historical Writings”**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மதிப்புக்குரிய தகைசார் வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் வழங்கும் சிறப்புக்கருத்துரை
காலம் : 02.03.2021 (செவ்வாய்க்கிழமை)- பி.ப 3.30 மணி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35வது பொதுப்பட்டமளிப்பு வைபவத்தின் ஒரு பாகமாக அமையும், சேர் பொன் இராமநாதன் நினைவுப் பேருரை மற்றும் சீமாட்டி லீலாவதி நினைவுப் பேருரையைத் தொடர்ந்து பல்கலைக்கழக வேந்தரின் பேருரை இடம் பெற இருக்கின்றது.
இப்பேருரையானது எதிர்வரும் 2ம் திகதி (செவ்வாய்க்கிழமை) - பி.ப 3.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறும். இந் நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் மதிப்புக்குரிய தகைசார் பேராசிரியர்.சி.பத்மநாதன் அவர்கள் **“பழங்காலப் பதிவுகளும் நிகழ்காலப் பார்வைகளும் - மகாவம்சமும் வரலாற்று நூல்களும்” (“Past and Present- The Mahavamsa and Historical Writings”)** என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்ற உள்ளார்.
மேற்படி விடயம் தொடர்பாக பேராசிரியர் அவர்கள் கொண்டிருக்கும் புலைமைசார் மற்றும் ஆய்வு சார் கருத்துக்கள் யாழ்ப்பாணக் கல்விச்சமூகத்தினருக்கு குறிப்பாக பல்கலைக்கழக கல்விச் சமூகத்தினருக்கு மிகவும் பயனுறுதி வாய்ந்ததாக அமையப்பெறுவதனால், மேற்படி சிறப்புக் கருத்துரை வழங்கும் நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
முக்கிய குறிப்பு: மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவோர் கொவிட் 19 பரம்பல் தடுப்புக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுடன் நிகழ்வில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
பதிவாளர்
25.02.2021

## மரண அறிவித்தல்

பிறப்பு
24
05
1944



இறப்பு
26
02
2021

### திருமதி சண்முகநாதன் விமலாம்பிகை (பாலா)

காரைநகர், தங்கோடை அறுகம்புலத்தை பிறப்பிடமாகவும், இல.28, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகநாதன் விமலாம்பிகை (பாலா) நேற்று (26.02.2021) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சண்முகநாதன் (அன்னம் சாறி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான (கல்கமுவ பிரபல வர்த்தகர்) நடராஜா (சின்னத்தம்பி) மாணிக்கம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பார்வதிப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான லலிதாம்பிகை (லீலா), கமலாம்பிகை, வர்தராஜா (வரதன்), சிவராஜா (சிவி) மற்றும் அன்னலட்சுமி (வெள்ளவத்தை), தவமலர், பாக்கியம் (நீர்கொழும்பு), நவமலர், செல்வராஜா, மங்கையற்கரசி ஆகியோரின் சகோதரியும், லோகதாசன் (கண்ணன்-சுவிஷ்), காந்தரூபன் (லண்டன்), கௌரி (லண்டன்), யோகராஜன் (யுகு-மதுரா பான்சி, நீர்வேலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாகேஸ்வரி, முருகமூர்த்தி, தயாநிதி (ஆசிரியர்-நீர்வேலி றோ.க.த.க.பா.) ஆகியோரின் மாமியாரும், பைரவி, பாரதி, ஆரணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 28.02.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனத்துக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு : 077 711 4860

தகவல் :
ச.யோகராஜன் - (யுகு) மகன்

Baby Photo
உங்கள் மழலை
செல்வங்களின்
உயிரோவியமான
புகைப்படங்களுக்கு
பேபி போட்டோ
போட்டோ அன் வீடியோ
BEBY PHOTO &VIDEO



கலர் பிறிண்டிங்
அல்பம்
கிறிஸ்டல் பிறேம்
லேசர் கட்டிங்
பிளாஸ்ரிக் ஐடி காட்
டி~சேட் பிறிண்டிங்
மக் பிறிண்டிங்
போட்டோ கொப்பி
லெமினேற்றிங்

அங்கீகாரம் பெற்றவர்
(ONLINE SMART e.NIC) தேசிய அடையாள அட்டை
(ONLINE PASSPORT) ஒன்லைன் பாஸ்போட்

பேபி போட்டோ
பலாலி றோட்

91.பலாலி வீதி. திருநெல்வேலி 021 222 6912 . 0761419308

## 21 நாடுகள்...

அதேவேளை இலங்கைக்கு ஆதரவு தெரிவித்த நாடுகளில் 10 நாடுகளுக்கே வாக்கு உரிமை உள்ளது என்று கூறப்படுகின்றது.

பிரிட்டன், நோர்வே, கனடா, யுனைடெட் ஸ்டேட்ஸ் ஜெர்மனி, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை அரசின் நிலைப்பாட்டை எதிர்த்து கருத்துகளை வெளியிட்டுள்ளன.

இந்தியாவும், ஜப்பானும் நடுநிலை வகித்தன. மேற்கத்திய உலகின் நட்பு நாடாக இருந்தபோதிலும் ஆஸ்திரேலியா மிதமான தொனியில் கருத்துக்களை வெளியிட்டுள்ளது. இலங்கை அரசின் நிலைப்பாட்டை ஆதரித்து கருத்துக்களை வெளியிட்டுள்ள 21 நாடுகளில், 10 நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## இலங்கைக்கு....

ளளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையின் உள்ளடக்கங்கள் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றன. இனப் பதற்றங்களைத் தடுக்கவும், தேசிய ஒன்றுமையை நிலைநாட்டவும் இலங்கை ஒரு நியாயமான திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று ஜெனிவாவுக்கான சீனத் தூதர் சென் சூ ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தெரிவித்துள்ளார்.

அனைத்து நாடுகளின் இறையாண்மையையும், அரசியல் சுதந்திரத்தையும் மதிக்க வேண்டியதன் அவசியத்தையும் ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதையும், அரசியல் செல்வாக்கைச் செலுத்துவதையும் கைவிட வேண்டும் என்பதைச் சீனா வலியுறுத்துகின்றது என்றும் தெரிவித்தார். (எ-இ)

## விபத்தில்...

என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 18ஆம் திகதி சைக்கிளில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் சென்று திரும்பியுள்ளார். அப்போது தட்டாதெருச் சந்திப் பகுதியில் வீதியோரம் இறங்க முற்பட்டபோது, பின்புறமாக வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது. விபத்தில் காயமடைந்த முதியவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பயனின்றி அவர் நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டார். (எ-26)

## ஆணையாளர்....

இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை பிரதி ஆணையாளர் நடா அல் நசிஃப் கருத்துத் தெரிவித்தபோது, இந்த விடயத்துக்கான பொருத்தமான நடைமுறை எதுவென்பதை மனித உரிமைகள் சபையே தீர்மானிக்கும் என்றார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் மிச்செல் பச்லெட் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்த அறிக்கை, இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுக்களின் பின்னர் சீராக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசு சில விடயங்களுக்கு எதிர்ப்பைத் தெரிவித்திருந்தமையால் இந்த அறிக்கையை இறுதிப்படுத்த மூன்று வாரங்கள் காலதாமதம் ஏற்பட்டது. இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள சில பொறிமுறைகளில், பல விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சிரியா, மியான்மர் மற்றும் வடகொரியா போன்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதைப் போன்றோ அல்லது இலங்கை விடயத்தைப் பிரத்தியேகமான முறையில் கையாள்வது தொடர்பாகவோ அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயங்களுக்குப் பொருத்தமான நடைமுறை எதுவென்பதை மனித உரிமைகள் சபையே தீர்மானிக்கும். இலங்கை விடயத்தில் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையாளர் அலுவலகத்தால் பல ஆண்டுகளாகச் சேகரிக்கப்பட்ட சான்றுகள் உள்ளன. என்றார். (எ-இ)

## அரசின்....

வதிவிடப் பிரதிநிதி அலுவலகம் மற்றும் நட்பு நாடுகள் ஆகியவையால் இணைந்து தயாரிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளே முன்வைக்கப்படும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பாக பிரிட்டன், ஜேர்மன், கனடா, வட மெசிடோனியா, மொண்டிநீக்ரோ மற்றும் மலாவி ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து புதிய பிரேரணையைக் கொண்டுவந்துள்ளன. இந்தப் பிரேரணை தொடர்பான பரிந்துரைகளையே எதிர்வரும் திங்கட்கிழமை அரசு முன்வைக்க எதிர்பார்த்துள்ளது.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான அறிக்கையை அரசு முற்றாக நிராகரித்துள்ளது. இந்த அறிக்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உரையாற்றிய 21 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்துள்ளன.

ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், ஈரான், வியட்நாம், மாலைதீவு, கியூபா, நேபாளம் உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன. பிரிட்டன், நோர்வே, கனடா, அமெரிக்கா, ஜேர்மன் உள்ளிட்ட 15 நாடுகள் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டைப் பதிவு செய்துள்ளன. இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் நடுநிலையான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன. (எ-22)'

## இலங்கைக்கு...

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது அமர்வு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இலங்கை தொடர்பான விவகாரம் கடந்த 2 நாள்களாக ஆராயப்பட்டிருந்தது. இதில் இலங்கைக்கு ஆதரவாக சுமார் 21 நாடுகள் கருத்துக்களை வெளியிட்டிருந்தன. சில நாடுகள் நடுநிலைப் போக்கை வெளியிட்டிருந்தன. 15 நாடுகள் எதிர்த்திருந்தன. இந்த நிலையில் இது தொடர்பில் வெளிநாட்டு ஊடகம் ஒன்றின் கொழும்பு செய்தியாளர் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது-

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவு நிச்சயம் தோற்கடிக்கப்படும். நட்பு நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளன. அதிலும் குறிப்பாக சக்தி மிக்க நாடுகள் பிரேரணையைத் தோற்கடிப்பதில் உறுதியாக உள்ளன. இலங்கையைப் பழிவாங்கும் வகையில் ஒரு சில நாடுகளின் சதித் திட்டங்களுடன் பிரேரணை முன்வை க்கப்பட்டுள்ளது. ஆனாலும் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் தினேஸ் தெட்டத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். இதனைக் கருத்தில் எடுத்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள், பிரேரணையை நிச்சயம் தோற்கடித்தே தீரும் என்றார்.

இதேவேளை இந்தியா, ஜெனிவாவில் வெளிப்படுத்திய நிலைப்பாடு தொடர்பில் இப்போது கருத்து எதனையும் கூற விரும்பவில்லை என்றும் கெஹலிய குறிப்பிட்டார். (ஒ.5,22)

## ஜெனிவா...

வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். 'நல்லிணக்க செயன்முறை மற்றும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாகத் தமிழர்களின் வேணவாக்களுக்குத் தீர்வுகாணத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இலங்கையைக் கோருகின்றோம். இலங்கை ஒருமைப்பாடு பேணப்பட வேண்டிய அதே நேரத்தில், இலங்கைத் தமிழர்களின் கௌரவம், சம உரிமை என்பவை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதே இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு' இவ்வாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத்தொடரில் நேற்றுமுன்தினம் இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு இந்தியாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி இந்திரா மணி பாண்டே கருத்துத் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு குறித்து அதன் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு விடயங்களில் இந்தியா கொண்டுள்ள நிலைப்பாட்டை மனதார வரவேற்கின்றோம்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதும், ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்கள் நீதி, சமாதானம், சமத்துவம் மற்றும் கௌரவம் என சகல உரிமைகளுடன் வாழ்வது உறுதி செய்யப்பட வேண்டும் என்பதும் இந்தியாவின் நிலைப்பாடு. இதை இலங்கை அரசுடனான பேச்சின்போது மோடி தலைமையிலான இந்திய மத்திய அரசு வலியுறுத்தி இருந்தது. தற்போது சர்வதேச அரங்கிலும் இந்தியா தனது நிலைப்பாட்டை எடுத்துரைத்துள்ளது-என்றார். (ஒ.5,22)

## யாழ்....

ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து சிறைச்சாலையில் உள்ளவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

15 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, அவர்களில் 6 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, சிறைச்சாலையில் உள்ள 150 பேரின் மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் முடிவுகள் நாளையே (இன்று) கிடைக்கும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

அதேவேளை, கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 81 வயதுப் பெண் ஒருவருக்கும் நேற்றுத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ-26)

## பிரம்டன்...

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி கடந்த மாதம் இடித்தழிக்கப்பட்டது. இதற்கு உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் தமிழர்கள் தங்களது எதிர்ப்புக்களை வெளியிட்டிருந்தனர்.

கனடாவில் அதிகமாக தமிழ் மக்கள் வாழும் பகுதியான பிரம்டன் நகரசபை, பூங்கா ஒன்றில் ஈழத்தமிழர்களின் இனப்படுகொலையை நினைவுகூரும் வகையில் நினைவுத்தூபியை அமைக்க அனுமதி வழங்கியிருந்தது.

இதன்பின்னர், கனடாவில் உள்ள இலங்கைத் தூதரகம் குறித்த நகரசபைக்கு தனது கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளதோடு, இதற்கு எதிராக சிலரைகளமிறக்கியுள்ளது என்றும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. (க-இ)

## பழமைமிக்க...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

அண்மையில் திருகோணமலை மத்திய கலாசார நிதியத்தின் ஆய்வு உத்தியோகத்தர்கள் தமிழ்க் கல்வெட்டு ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக் கல்வெட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தொல்லியல் பட்டதாரியான பிரசாத் என்பரால் நேரில் பார்வையிடப்பட்டு அந்தப் புகைப்படம் எனக்கு அனுப்பப்பட்டுள்ளது. நீண்ட கல்வெட்டின் ஒரு பகுதி, உடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அந்தக் கல்வெட்டுக்களில் உள்ள ஆறு வரி எழுத்துக்களை தெளிவாக வாசிக்கக் கூடியதாக உள்ளது. இந்தக் கல்வெட்டு, ஆலயம் ஒன்றுக்கு (அது பெரும்பாலும் கோணேஸ்வரர் ஆலயமாக இருக்க வேண்டும் ) அரிசி ,நெல் என்பவற்றை தானமாக வழங்கியது பற்றி கூறுகின்றது அவ்வாறு வழங்கப்பட்ட நெல் அரிசி என்பவற்றின் அளவுகள் குறியீட்டு முறையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கல்வெட்டு பற்றி மேலும் ஆய்வு செய்த தமிழகத்தில் முதன்மை கல்வெட்டு அறிஞரான சுப்பராயலு, கலாநிதி ராஜகோபால் போன்றவர்கள் இந்தக் கல்வெட்டு இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்டது என அடையாளப்படுத்தியுள்ளனர்.

சோழராட்சி முடிந்ததன் பின்னர் பொலநறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டாலும் அவர்களும் தொடர்ந்து இந்து ஆலயங்களுக்கு ஆதரவு கொடுத்தமைக்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. இப்போது கிடைத்திருக்கின்ற இந்தக் கல்வெட்டு சோழர் ஆட்சியின் பின்னர் திருகோணமலையில் வாழ்ந்த இந்துக்களால் கோணேஸ்வரர் ஆலயம் பராமரிக்கப்பட்டு வந்தமைக்கு நல்ல ஒரு சான்றாகக் காணப்படுகின்றது. எதிர்பாராத வகையில் மத்திய கலாசார நிதியத்தால் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் கல்வெட்டுச் சூழலில் மேலும் சில கல்வெட்டுக்கள் மற்றும் சில கட்டட அழிபாடுகள் உள்ளன என்று அறிய முடிகின்றது. ஆகவே அந்த இடத்தில் மேலும் ஆய்வுகள் செய்வதன் மூலம் கோணேஸ்வரர் ஆலயத்தின் பழமையான வரலாற்றை அறியக் கூடிய அரிய பல கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்படலாம் என நம்பப்படுகிறது என்றார். (ப-214)

© 2000 Agfa-Gevaert N.V.

# தனது குழுவின் அறிக்கையை தானே நிராகரித்தார் மைத்திரி

கொழும்பு,பெப்.27
ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரிக்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இதில் குறித்த அறிக்கையை நிராகரிக்க, கட்சியின் நிறைவேற்றுக்குழு ஏகமனதாகத் தீர்மானித்தது.
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அரச அதிகாரிகள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய்யானவை. வர்த்தமானி ஊடாக ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட அதிகாரம் சில சந்தர்ப்பங்களில் அத்துமீறி பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கட்சியின் நிறைவேற்றுக்குழுவால் சுட்டிக்காட்டப்பட்டது.
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைக் குழுவை ஜனாதிபதியாக இருந்த சமயத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இருக்கும் மைத்திரிபால சிறிசேன நியமித்திருந்தார். அந்த ஆணைக்குழுவின் பரிந்துரையையே தற்போது அவர் நிராகரித்துள்ளார். (க-இ)

# ஜனாதிபதி விருந்துபசாரம் இம்ரானுக்கு ஏன் இல்லை?

## ஐ.தே.க. தவிசாளர் கேள்வி

கொழும்பு, பெப். 27
கடந்த காலங்களில் பின்பற்றப்பட்டு பாரம்பரியங்களுக்கு அமைவாக, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு ஜனாதிபதியால் ஏன் விருந்துபசாரம் வழங்கப்படவில்லை? என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன கேள்வி எழுப்பியுள்ளார். வெளிநாட்டு அச்சுறுத்தல் காரணமாகவா இந்தப் பாராம்பரியம் மீறப்பட்டது? எனவும் அவர் வினவினார்.
கொள்ளுப்பிட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
பாகிஸ்தான் பிரதமரான நவாஸ் ஷெரிப் இலங்கை வந்தபோது, அப்போதைய ஜனாதிபதியும் பிரதமரும் தனித்தனியே அவருக்கு விருந்துபசாரம் வழங்கினர்.
முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தின் பர்வேஷ் முஷாரப் இலங்கை வந்திருந்தபோதும் அவ்வாறே ஜனாதிபதி தனியாகவும் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க தனியாகவும் விருந்துபசாரம் வழங்கினர்.
நாட்டுக்கு வருகைதரும் அரச தலைவர்களுக்கு, இவ்வாறு விருந்தளிப்பது பாராம்பரிய நிகழ்வொன்றாகும். பாகிஸ்தான் பிரதமருக்கு, பிரதமர் மஹிந்த மாத்திரமே விருந்தளித்துள்ளார். ஏன் பாரம்பரியம் மீறப்பட்டது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் -என்றார். (ம-இ)

## யாழ்ப்பாணத்தில்

# 15 ஆயிரம் பேர் வேலை தேடுபவர்களாகப் பதிவு

## யாழ். மாவட்ட மேலதிக செயலர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம்,பெப்.27**
**யாழ்ப்பாண மாவட்டத்தில் 14 ஆயிரத்து 565 பேர் தொழில்வாய்ப்புக்களை தேடுவோராக உள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன என யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.**

தேசிய மட்டத்தில் நடைபெறுகின்ற மூன்றாம்நிலை, தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழில் பயிற்சித் துறையை அபிவிருத்தி செய்வதற்கான கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தற்போது கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக வேலை வாய்ப்பற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
எமது இளைஞர்களின் வாழ்க்கைத் திறனை மேம்படுத்துவதற்காக பல்வேறுபட்ட செயற்றிட்டங்களை பிரதேச செயலகங்கள், வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை, மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழு, தேசிய தொழில் பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி அதிகாரசபை ஆகியவை முன்னெடுத்து வருகின்றன.
யாழ்ப்பாண மாவட்டத்தில் 14 ஆயிரத்து 565 பேர் தொழில் வாய்ப்புக்களைத் தேடுவோராக உள்ளனர் என புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. எனினும் இவ் எண்ணிக்கை சற்று அதிகமாகக் காணப்படலாம்.
இவ்வாறு வேலை தேடுவோர் க.பொ.த உயர்தரம், க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த. சாதாரண தரத்துக்கும் குறைந்த தகுதி என்ற அடிப்படையில் காணப்படுகின்றனர்.
மேலும் மூன்றாம் நிலை கல்வி தொடர்பான பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் பல்வேறுபட்டவர்களுக்கான வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்க முடியும் -என்றார். (ஐ-இ)



# கஞ்சாவுடன் இளைஞர்கள் கைது

உடமையில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 5 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.
வவுனியா பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் நேற்று அதிகாலை வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
சந்தேகநபர்கள் மகாரம்பைக்குளம், பூந்தோட்டம் மற்றும் மதகு வைத்தகுளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 20 வயது தொடக்கம் 23 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இவர்களிடமிருந்து 8 ஆயிரத்து 740 மில்லிக்கிராம் கஞ்சாவை மீட்டதுடன், சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-110)

# அபாய வலயமாக கல்முனை அறிவிப்பு

கல்முனை,பெப்.27
கல்முனையின் சில பகுதிகள் மீண்டும் கொரோனா அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி மருத்துவர் ஜி.சுகுணன் தெரிவித்துள்ளார்.
கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் அக்கரைப்பற்று, காரைதீவு, சாய்ந்தமருது மற்றும் கல்முனை தெற்கு ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் கொரோனா வைரஸ் தொற்று அபாய வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் வாழும் பொது மக்கள், இறுக்கமான சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (க-இ)

**மலிவு விலையில்**
**பூக்கள் விற்பனைக்கு**
மல்லிகை, றோஸ், ஓக்கிட், செவ்வந்தி, சாமந்தி, தாமரை ஆகியவை விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 112 5550

**வீடு வாடகைக்கு**
இல. 25, செம்மணி வீதி, நல்லூர் மாடி வீடு வாடகைக்கு உண்டு நிறுவனங்களுக்கு உகந்தது. (முத்திரைச் சந்தியிலிருந்து 1கி.மீற்றர்)
தொடர்பு: 075 966 4266

**பணியாளர் தேவை**
யாழ் நகரில் இயங்கும் பிரபல வைத்திய ஆலோசனை நிலையத்திற்கு (கிளினிக்) பெண் தாதியர் மற்றும் தாதி உதவியாளர் தேவை.
தொடர்பு: 077 940 5928

**வேலை வாய்ப்பு**
யாழ் நகரில் உள்ள உணவகத்திற்கு பின்வரும் பணி வெற்றிடங்கள் உள்ளன.
1. சமையல் உதவியாளர் (ஆண்)
2. உணவு பரிமாறுபவர்கள் (ஆண், பெண்)
முன் அனுபவம் விரும்பத்தக்கது
தொடர்பு: 077 758 5909

**காணி விற்பனைக்கு**
செம்மணி வீதியில் நாயன்மார் கட்டில் நான்கு பரப்பு காணி விற்பனைக்குண்டு
இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
ஒரு பரப்பின் விலை 500 000/-
(ஐந்துலட்சம்)
077 288 0152
077 623 4204

**காணி விற்பனைக்கு**
யாழ். கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு).
**இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்**
**(தரகர் தேவையில்லை)**
பருத்தித்துறை வீதியில் இருந்து 40 மீற்றர் நடைதூரத்தில் உள்ளது.

இருபாலை கிழக்கு C.C பாடசாலைக்கு அருகாமையில் 4¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு).
**(பிரித்துக் கொடுக்கப்படும்)**
பருத்தித்துறை வீதியில் இருந்து 1½ கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது.
**(தரகர் தேவையில்லை)**
077 805 1655
077 596 3845


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.